உ

குருவேதுணை.

சண்மத சமரசாதீத சித்விலாச

நாமாவலி.

இஃது

காரணப்பட்டு - சமரசபஜனை

ச - மு - கந்தசாமிபிள்ளையவர்கள்

இயற்றியது.

சென்னை - அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

ஜட்ஜ்கோர்ட்வக்கீல் - கூடலூர்

அ - சுப்பராயலுரெட்டியார் பி-எ, பி-எல்.

அவர்களால்,

சென்னை:

இந்து யூனியன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

துர்முகிஸு மீனரவி,

1896.

உ

குருவேதுணை.

இந்நூலச்சிட்டாரது

சிறப்பு.

சித்திமிகுஞ் செந்தமிழிற் சண்முகநா மாவளியாய்த் திகழு மிந்நூல்
எத்திசையு நனிபரவ வொன்றையா யிரமாக்கி யெவர்க்கு மீந்தான்
பத்திநல மன்படக்கந் தயைசாந்த மிகுதருமப் பண்பு வாய்ந்த
உத்தமன் ஹைகோர்ட்டுவைக்கீனற்சுப்பராயலு நம்முயர்சீமானே.

இஃது,

சென்னை அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியார்

இயற்றியது.

உ

சிவமயம்.

இந்நாமாவளி
அரங்கேற்றுவைபவப்பாசுரம்.

இஃது,

சென்னை-தொண்டைமண்டலம்

ஆங்கிலோ வேர்னகுலர் கல்விச்சாலைத்

தமிழ்த்தலைமைப் பண்டிதராகிய

திருமழிசை வீரசிம்மாசனமடம்

ஸ்ரீமத் சாந்தலிங்கஸ்வாமிகளாதீனம்

வித்வான் - சிவப்பிரகாசையரவர்கள்

இயற்றியது.

இரட்டையாசிரியவிருத்தம்.

பார்பரவு மெழுமூன்று வள்ளலுள நாணமால்
பதுமனிந் திரனுநாணப்
பஞ்சதரு சுரபிநிதி மஞ்சுமா மணியெனப்
பகருமிவ் வைந்துநாணப்
பன்னுமண வினைஞான்றி னண்ணினோர்க் கருண்முத்தி
பதநல்கு வள்ளன்முன்னர்ப்
படுவிஷத் தாலிறந் திட்டவிரு வர்க்குயிர்ப்
பாலித்த வள்ளலெனும்
[illegible] பாத விதயர்முன் காணவே
[illegible]ருள் காட்டும்வள்ளல்

அரங்கேற்றுவைபவப்பாசுரம்.

எழிலிலகு ஞானசம் பந்தவள் ளற்பத
விணைச்சிர மிலைந்தவள்ளல்
எங்கள்குரு வள்ளலருள் வள்ளலரு வுருவள்ள
லேகாக்ர சித்தவள்ளல்
எண்ணுறு ஷடாந்தசம ரசசுத்த சன்மார்க்க
சங்கமியை வித்தவள்ளல்
தார்பரவு திருவருட் பிரகாச வள்ளலிரு
சரணமல ரிதயவள்ளல்
தண்பணை யிலங்குவள் ளற்பாகை வாழ்கந்த
சாமிவள் ளல்சண்மதச்
சமரசா தீதசித் விலாசநா மாவளித்
தனிப்பரவ வச்சியற்றித்
தருநிலவு கூடலூர் மேவுமை கோர்ட்டினிற்
றகமைபெறு வைக்கீலெனப்
பேர்பரவு சுப்பரா யனுநாம வேள்தரப்
பிருங்கிமா நகரில்வாழும்
பேசருமி ராமசா மிக்குரிசி லன்பினுற்
பின்னைவாழ் சென்னைநகரில்
பெட்புற் றிலங்குமுத் தமிழ்வலோ ரவைநாப்பண்
பெரிதரங் கேற்றுவள்ளற்
பெறுந்திற் னனந்தனு முனைத்தவரி தாகுமப்
பெற்றியோன்வாழ்கமாதோ.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

சமரசவேத சன்மார்க்கசங்கத்து வித்வான்களுள் ஒருவராகிய

புராணிகர்

பொ. சுந்தரம்பிள்ளையவர்களியற்றிய

ஏகத்தாளேதுகையாசிரியப்பா.

மணிகடற்சுலவைந் திணை நிலமுடித்த
பணிதலைப்பாயல் வெஃகுபுநெடுங்கண்
வளர்ந்தருட்புடவி யளந்தவானவன்வரிச்
சிறையளிக்குழாங்க ளறுப்தத்துளரப்
புரிமுறக்குடைந்து நறவுகொப்பளிக்கு
முள்ளைமுளரிவள்ள வாய்த்தளிமப்
பண்ணவன்முதலா நண்ணுபுத்தேளிரும்
பவப்பணிகழன்று நிவப்புறுமுத்தித்
திளைப்புறப்பிறக்கு மளப்பருஞ்சீர்சால்
வான்றெடுகும்மி யான்றபொற்குன்றின்
தகணத்துயரிய விக்கருமத்தலத்
தவிச்சையகந்தொளிர் தவச்செய்வினருங்

சிறப்புப்பாயிரம்.

கண்டகநாட்டுந் தண்டகநாட்டுள்
பூம்புனற்பொய்கையிற் கூம்பாம்பலின்மொட்
டிளவனப்பேட்டைக் கொளவலர்வனசத்
தளிகள்பண்ணிசைக்க வொளிகொள்பூம்பணைமிசைக்
கிள்ளைதன்பெடையுடன் பள்ளியிற்கண்வளர்
நல்வளம்பலபெறு தொல்லையந்தலமாய்ப்
பணையுளமகிழ விறையருணடனம்
வயக்கியதிருவருண் முயக்கமருஅத்
தில்லைப்பதியி னெல்லைக்கணித்தாய்
விளங்குபல்லுயிர்க்குங் களங்கமில்ஞானோ
தயமெழத்திருவரு ளியலியதாமென
நிறைமதிநிலாவு முறையமைவளாகத்
துங்கநிகேதனந் தங்குவானவரினைப்
பரிந்துபசரித்தே விருந்தெனவிளிக்கும்
திருவூர்வளமை மருதூருவந்து
தேமாமறைபுனை யாமாத்தியர்குலத்
தவமெனவெழுந்து நவவடிவிறந்த
சிவபரஞ்சுடரே பவந்தெறவமைந்தெனத்
தராதலம்புகழுறு மிராமலிங்கப்பெயர்
பூண்டுசிற்சபை நடத்தாண்டவனருளாற்
சொப்பனக்காட்சியிலற்புதந்திளைப்பச்
சாற்றியமாற்ற மாற்றருமுனையென
வெல்லையின்மலக்கட் டொல்லையினறுக்குக்

தானமாமுத்தர ஞானசிதம்பர
சிற்சபையமைத்தாங் கற்புதம்பலபலக்
காட்டியேயருணெறி நாட்டியவள்ளல்
சுத்தமெய்ஞ்ஞான சத்தியமார்க்க
மருவியதிருவருட் பிரகாசவள்ளல்
பொன்னடிக்கன்பே மன்னியவள்ளற்
பாக்கத்திலங்கு மாக்கத்துயர்ந்த
சமரசபஜனைக் குமரனெனப்புகழ்
கந்தசாமிப்பெயர் நந்தங்கோமான்
சண்மதசமரச நண்ணுமதீத
சித்துவிலாச முற்றநாமாவளித்
தோத்திரஞான சாத்திரமரபி
னியற்றினனதனை வயற்றலமியலு
மாடலூர்மாடக் கூடலூர்மேய
தக்கவைக்கோர்ட்டு வைக்கீலுத்தி
யோகமுறுந் தியாககுணாளன்
தயைசாந்தமீகை யியலுநல்லொழுக்க
மிவையுருவிலவெனு நவையறவவைதிரண்
டுருவெடுத்தெனவே வருசற்குணவா
ளொப்புயர்வில்லாச் சுப்பராயலுவே
னச்சிட்டவிப்ப முச்சகம்வியக்கும்
பிருங்கிமாநகரத் தருங்குவளைப்புய
வேளாண்மாந்தருட் டாளாண்மையுற

சிறப்புப்பாயிரம்.

மிராமசாமி நராதிபன்முயற்சியாற்
றுன்முகிவருட மன்னியவாடி
மாதத்துறுங் குருவாரமுத்ராட
மன்னியவிங்காட் சென்னைமாநகரில்
கற்றவர்குழுமி யுற்றபேரவையில்
பற்பலர்வியந்திடீ தற்புதமெனவே
சிறந்துளக்குற வீண்டரங்கேற்றினனவன்
கற்பகாலத்தும் பொற்புறுசெல்வங்
கல்வியேமுதலா நல்லொழுக்கமுடன்
வாழிவாழி மகிழ்வுடன்வாழி
வாழிவாழி வாழிவாழியவே.

பிழை திருத்தம்.

பக்கம்.	நாமாவளி	பிழை.	திருத்தம்.
எ	சு	காதார	காதர
௩௧	௫௦	விற்பனற்	விற்பனர்க்
சுசு	கசுரு	நோந்தார்	நோர்ந்தார்

சாத்துகவிகள்.

உத்தரஞானசிதம்பரமென்னும்
பார்வதிபுரத்து வசிக்கும்

சத்தியஞானனந்தேந்திரசரஸ்வதி யதீஸ்வரர்

அருளிச்செய்தது.

எண்சீர் விருத்தம்.

சதுர்வேத சித்தாந்த தத்துவமெய்ப் பொருளைச்
சங்கரநா ரணரிருவர் சமரசமெய்ந் நெறியாற்
பொதுவாகச் சூத்திரபா டியத்தாலே வடசொற்
பூரியிட்ட சுத்தவிய லாரிடத்தைத் தமிழாற்
றுதியாக்கி நூற்பொருளுள் ளீடாக்கிச் சொற்ற
சுகமயமாந் திருவருட்பாச் சூழ்தருநா மத்தை
விதிவழியா வளியாக்கிப் பஜனைசெய வளித்தான்
வித்தகமெய்க் கந்தசுவா மிப்பெயரோன் மாதோ.

முருகதாசசுவாமிகளென்றுந் திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்
விளங்குகின்ற

ஸ்ரீமத் - தண்டபாணிசுவாமிகள்

அருளிச்செய்த

நேரிசைவெண்பாக்கள்.

வடலூரா னன்பர்களில் வாய்மைகல்வி ஞானத்
திடமார்ந் தவிர்தருமோர் செல்வன்—கடல்சூழும்
பாருலக முய்வதற்காப் பாடுமிசைப் பாடலுறு
தாருமவர்க் குண்டா மருள். (க)

அந்தண் வடலூரா னன்பர்களிற் சீரியனுங்
கந்த சுவாமிக் கவிப்புலவ—னிந்த
வுலகத் தினர்மகிழ வோதுமிசைப் பாட
விலகற்குஞ் சாட்சிதெய்வ மே. (௨)

உரையாசிரியர்

மகாவித்வான்காஞ்சீபுரம் - சபாபதிமுதலியாரவர்கள்குமாரர்

கா. பாலசுப்பிரமணியமுதலியாரவர்கள்

இயற்றிய

நேரிசைவெண்பா.

செய்தோ ரிசைஞானஞ் சேர்ந்தன்பிற் பாடியே
மைதோய் ப்வமறுசன் மார்க்கசங்கத்—துய்வாரால்
நாமா வளிமேவு நங்கந்த சாமிசொற்ற
நாமா வளித்தெரிச னம்.

மகாவித்வான் சித்தாந்தரத்நாகரம்
ஆன்வாயல்

வேங்கடசுப்புப்பிள்ளையவர்கள்

இயற்றியன.

கட்டளைக்கலித்துறை.

செயனந் தரியங்கு சன்சேய் நபோமணி செம்பொன் வெண்பொ
னயனந் தரியர்ன் மேற்பொது நாடி யருந்தமிழி
னயனந்தரியநன் குமர வளிநல்கி நண்ணினன்மெய்ப்
புயனந் தரியலர் சூழ்கந்த சாமிநற் பாவலனே. (௧)

நேரிசைவெண்பா.

சீமான் வடலூர்த் திருவருட்பா வள்ளலருட்
கோமா னுணர்த்துங் குறிப்புணர்ந்தே—மாமாட்சி
நாமா வளிதந்தா னங்கந்த சாமியின்ப
மாமா றிசைப்பண் ணமைத்து. (உ)

சென்னை-அஷ்டாவதானம்

பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியன.

பன்னிருசீர்விருத்தம்.

உலகதனி லொருஞான திலகமென முன்னாளி லோங்குமெங்க, ளுயர்தாயு மானவனல் லவதார மாவந்திங் கோங்கும்பத்தி, நலமருவு காருண்ய மேயிலகுந் திருமுறைக ணல்கியாண்ட, நங்களருட் பிரகாச வள்ளலிராம லிங்ககுருநாதன் றனைத், தலவிதயந் தனில்வைத்தெந் நாளுஞ்சண்மதத்தினர்க டழுவி யேத்தச், சமரசா தீதசித்விலாசநாமாவளியைச் சாற்றி னானல், புலனீகை கருணைபொறை குணம்வாய்மை யருட்செல்வம் பொருந்திவாழும், புகழ்பெறுமென் கண்மணிநேர் கந்தசுவா மிப்பெயர்கொள் புலவன்றானே. (க)

நேரிசைவெண்பா.

கூறுமொரு நாவினிக்குங் கொள்ளுமிரு காதினிக்குந்
தேறுமுள மென்றுந்தித் திக்குமே—பேறுபெறு
நல்லவரெல் லாம்வாழ்த்து நங்கந்த சாமியெனும்
வல்லவன்சொன் னாமா வளி. (உ)

திருமழிசை வீரசிம்மாசனமடம்
ஸ்ரீலஸ்ரீ-சாந்தலிங்கசுவாமிகளாதீனம்
வித்வான் - சிவப்பிரகாசையரவர்கள்
இயற்றியன.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நிலம்பூத்த வடந்தில்லைக் குற்றால நீபம்வேய் நிலவுங் கானத், தலம்பூத்த சபையைந்துஞ் சடசபையென் றிகந்தா னுத் தரனு னப்பேர், வலம்பூத்த சிற்சபையே நற்சபையெ ன் றருணடனம் வயக்கக் கண்ட, நலம்பூத்த சிதம்பரமி ராம லிங்கேசன் திருப்புகழே நவின்று வாழ்வோன். (க)

சமரசவே தசன்மார்க்கச் சங்கத்தன் பருக்கன்பன் சா ற்றஞ் ஞானத், திமிரமற நாளுஞ்சண் மதசமர சபஜனையைச் செய்யுந் தொண்டன், பமரமுரற் பூம்பொழில்சூழ் வள்ளற் பாக் கத்திலகும் பண்ப னல்வெண், கமலைவளர் நாவனெழிற் கந்தசா மிக்கவிஞன் களிப்ப யாரும். (உ)

மன்னுதிரு வருட்பிரகா சக்கோமான் வலிந்தருளும் வா ய்மை தன்னைத், துன்னுதுரி யத்தவிசி னின்றுணர்ந்தே யவ னருளாற் சொற்ற தாயச், சொன்னயமும் பொருணயமுந் தொடைநயமு நடைநயமுந் துதைந்தெஞ் ஞான்றும், பன் னுமடி யவர்க்கிருமைப் பயனுமங்கை நெல்லியெனப் பயக்க வல்ல. (ங)

சண்மதகௌ மரசாதி தச்சித்வி லாசநாமா வளியைத் தண் ணம், விண்மருவைவந் திருக்களறு காலினக்கு நறவளியா வெ றுமை கண்டே, யண்மியவைக் கஃதுணர்த்து வானெனவா

னள்வுமுயர்ந் தமருஞ் சோலே, நண்ணுமெழிற் கூடலூர் டிஸ்ட்டிரிக்ட்கோர்ட் வைக்கீலுத் தியோக நண்ணி. (௪)

ஆங்கிலோ தேசநரா திபர்களுளம் வியந்துசிரந் துளக்க வாய்ந்த, பாங்குறுபற் பலவற நூல் விதிவிலக்கின் வாதிக்கும் பான்மையாளன், பூங்குவளேத் தெரியல்புனேச் சுப்பிரா யலு க்குரிசிற் புவியோர்க் கெல்லாம், ஈங்கெளிதிற் கிடைப்பவச் சிலியைவித்துப் பெருஞ்சீர்த்தி யெய்தி ஞனல். (௫)

புதுவையைச்சார்ந்த புதுப்பாளேயம்

பு. அ. பெரியசாமிப் பிள்ளேயவர்க ளியற்றிய

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடல்புடையுடுத்தகாசினியதனிற்களித்துறுமன்பர்கடமக்கு
மடமைநீத்தருள்சீரருட்பிரகாசவள்ளலார்க்குகந்தமெய்யடியான்
தடநிலமெச்சுங்கலேகளிற்றேர்ந்துதழைத்தவன்கந்தசாமிக்கோன்
வடகிரியினுந்தன்புகழுறநாமாவளிபுகன்றுன்புவிக்கினிதே. (க)

நேரிசைவெண்பாக்கள்.

காரணப் பட்டமருங் கந்தசுவா மிக்குரிசில்
காரணப் பட்டவைவேற் கையன்முதற்—காரணர்மேற்
பத்துவித மாகப் பகர்ந்தா னருட்சோதி
வத்துணர்த்து நாமா வளி. (உ)

இசை நூலில் வல்லா னெழிற்கந்த சாமிக்
குசைமேதை யன்புலவர் கோமான்—திசையெங்குஞ்
சென்றுதிகழ் சீர்த்தியான் செப்பிப் பயனடைந்தான்
மன்றுபுகழ் நாமா வளி. (௩

நாமா வளவனைப்போ னண்கந்த சாமியிறை
நாமா வறைந்தவிய னன்கமரு—நாமா
வளியின் புகழுரைக்க வல்லேம்வான் சேட
னளியினுரைத் தாலுரைக்க லாம். (௬)

அரன்வாயல்

தங்கவேலுபிள்ளையவர்கள்

இயற்றியன.

நேரிசைவெண்பா.

கந்த சுவாமிக் கலைவல்லோ னுன்மறைசூழ்
எந்தசுவா மிக்கு மிசையூமென்—றிந்த
மணத்தமிழ்நா மாவளிப்பா மாலைதந்தான் பாடிக்
குணத்தமிழ்நா மாதருளிற் கொண்டு. (௧)

விருத்தம்.

பூமணக்கும் பாமணக்குந் திருவருட்பா வள்ளலருட் புனிதனெங்கோன், றூமணக்குந் திருவருட்பாற் கடன்மூழ்கி வருங்கந்த சுவாமிவல்லோன், மாமணக்குஞ் சீருடையா னரு ண்மணக்கத் தருநாமா வளியைப்பாடு, நாமணக்குங் கேட்டு ணரும் புலன்கரண மணக்குமுண்மை நாவலோரே. (௨)

கட்டளைக்கலித்துறை.

இத்திக்குநாமா வளித்தமிழ்ப் பாடலைத் தேயத்தினும்
பத்திக்குழாநிதங் கொண்டாட வச்சிற் பதித்தளித்தான்
சித்திக்குழாம்பெறு நங்கந்தசாமி சினேகன்சித்த
சுத்திக்கிடனக ரச்சுப்பிராயலுச் சுந்தரனே. (௩)

பிரசங்கரத்னுகரம்

சிதம்பரம் - வடிவேல்பிள்ளையவர்களியற்றிய

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்ட சிற்சபையி னுள்ளொளி யருட்சிவந் தேர்ந்தவவ்
வொளியினசைவே, திருநடன மென்றுணைசெய் திருவருட் பிரகாச
வள்ளலரு டேர்ந்தபுலவர், பேர்கொண்ட கந்தசாமிப்பிள்ளை பேசிய
பிறங்குசண் மதசமரசப், பீடுறுமதீதமாஞ் சித்விலாசப் பெருமை பே
ராத நாமாவளி, சூர்கொண் டெழுந் துள்ளுருக்கி யுள்ளுறுமென் புரு
க்கியுயிர் தனையுருக்கி, குருசாமி தன்மன முருக்கியுல கெங்குமே குல
வுமுயிர் தனையுருக்க, வேர்கொண் டெழுந்துகுரு சங்கமது கண்டதெ
னில் மெல்லியர் கண்போல் வெருட்டும், வித்தை கல்விச்சங்க மது
காண்ப தரிதோ விளம்புவீ ரிப்புவியரே.

திருமழிசை - கந்தசாமிமுதலியார் குமாரரும்,

சொர்க்கபுரம்

இராமலிங்கத்தம்பிரானவர்கள் மாணாக்கருமாகிய

வடிவேலுமுதலியாரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேதாக மங்கள்விதித் திட்டவறு சமயத்தின் மேவு வோரு
மாதாக மொடுபெறுத்தற் கியைநாமா வளியொன்று மருவு மன்பி
ஞேதாக ரந்தானீ தெனப்பரவ லோர்பலரு முவக்கு மாறு
சேதாகன் றிற்கிரங்குஞ் செயல்போல வியற்றினனற் சிந்தையானே.

மற்றவன்யா ரெனின்வடலூர் வளரினருட் பிரகாச வள்ளலென்னுஞ்
சொற்றருமெம் மிறைவனுய ரிராமலிங் கப்பெயர்கோ டேயோ னவை
னற்றமிலாக் கருணீக குலோற்பவன்முக் தூச்சாமி யறிஞனீன்ற
கற்றமிழ்தேர் சமரசஞானக்கந்த சாமியெனு நாவலேனே. (உ)

சென்னை
அஷ்டாவதானம் - வீராசாமிசெட்டியார்
மருகராகிய
ஸ்ரீ - அப்பன் செட்டியாரவர்கள்
இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நலந்திகழு மேமசபா நாதனுணை நாட்டவென்றுத் தரஞான சபையைநாட்டும், வலந்திகழ் சிதம்பர மிராமலிங்க வள்ளலருட் பாமணக்கும் வள்ளற்பாக்கத், தலந்திகழ் நற்கந்தசாமீந்தரன சொற்செந் தமிழ் நாமாவளியதனைக் கூடலூர்வாழ், பொலந்திகழ் ஹைகோர்ட்டு வைக்கீல் சுப்பராயப் புண்ணியனைச் சிட்டுவிப் புகழுற்றானல்.

சென்னை
இந்து யூனியன் அச்சியந்திரசாலை புரோப்ரைட்டர்
பிருங்கிமாநகரம் - இராமசாமிமுதலியாரவர்கள்
இயற்றிய

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொற்சபையி லருணடனம் புரிவோற்குத்தாம் பூலமது வைத்தழைத்துத் தரஞானப்பேர், சிற்சபையி னிறுத்துதிரு வருட்பிரகாசச் செம்மலடி பரவுவள்ளற் பாகைமேவும், சற்குணமார் கந்தசாமிக் கோமான்சொல் சண்மத சமரசாதீதச் சித்விலாச, வற்புதநா மாவளிக்கே யாசைகொண்ட வ் வமரரெலா மிமையாம லலைகின்றார்ால். (க)

வெண்பா.

வடலூசற் போல வரும்பிறவி மாற்றும்
வடலூ ரிராமலிங்க வள்ளல் - திடவருளாற்
கற்றவர்கில் லார்களிக்கக் கந்தசாமி வென்சொற்றான்
நற்றவநா மாவளியிந் நாள்.

அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

வல்லை - சண்முகசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றியது.

பதினான்குசீர்விருத்தம்.

கருணைவள ருண்மையறி வானந்தவடிவினைக் காட்சி யிற் கண்டதன்மேற், காணுறுமதீதா நு பவநிலையை யெவ ருங் கலந்துய்ய வருளினோங்குந், திருவருட்பிரகாச வள்ளலா ரிணைகழற் றினமுமற வாதவன்பன், செல்வதனிமவிகா ரண ப்பட்டிலுறைதருஞ் சீர்க்கந்தசாமிநிபுணன், மருளிகந்தான்ம கோ டிகளெலாம்பேரின்ப வாழ்வடைந் தொளிரவேசண், மதசமரசாதீத சித்விலாசப்பொருள் மலிந்தநாமாவளியினைப், பொருணயஞ்சொன்னயம் பொலிதரப்புவியுளோர் புங்கவரு மதிசயிப்பப், புகலிசைத்தமி ழினிலியற்றினன் புகழ்பெ றாஉம் புண்ணியம்வாய்ந்துளானே. (௧)

நேரிசைவெண்பா.

நங்கந்த சாமியெனு நற்கவிஞன் சண்மதச்சீர்
தங்குநா மாவளியைச் சாற்றினா—னெங்குந்
தெருட்பிரகா சம்பெறவே தேர்ந்தருட்பாச் சொற்ற
வருட்பிரகா சன்றுணையி னால். (௨)

பு. அ. பெரியசாமிப்பிள்ளையவர்கள் மாணக்கரில் ஒருவராகிய

ஓர்லேயன்பேட்டை

நா. வெங்கடாசலநாயகரவர்க ளியற்றிய

நேரிசைவெண்பா.

அந்த வருட்பிர காசவள்ள லார்க்கன்பன்
கந்தசா மிப்புனிதன் கண்டனன்வேற்—கந்தனண்ணன்
மாதாசிவன்பிரமன் மாலென்மா வாணிபொது
மாதாரிந் நாமா வளி.

கட்டளைக்கலித்துறை.

தெருட்பிர காச முடையோ ரெனப்புவி செப்புதிரு
வருட்பிர காச மிகுவள்ள லார்தமக் கன்புடையோன்
பொருட்பிர காச முறுகந்தசாமிப் புலவன்சொற்றுன்
மருட்பிரகாச மிலாச்சித்வி லாசநா மாவளியே.

அஷ்டாவதானம் பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்
மாணுக்கரு ளொருவராகிய

வண்ணக்களஞ்சியம்

காஞ்சி-நாகலிங்கமுதலியாரவர்கள்

இயற்றியது.

பண்மறை முடிவி லெழுந்தரு ளொருவன்
பாத பங்கேருக மதனின்
மண்மறை யணுக்க ணீங்குருப் பத்தி
வளம்பெறப் பற்பல விதத்து

முண்மையே தொடுத்துக் காரணப் பட்டி
னேங்குறு கந்தசா மிக்கோன்
சண்மதா தீத சமரச நாமத்
தனியிசை சாற்றினன் மாதோ.

அஷ்டாவதானம். பூவை. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்
மாணாக்கரிலொருவராகிய

புழலை. திருநாவுக்கரசு முதலியாரவர்களியற்றிய

எண்சீர்க்கழிநெடில்விருத்தம்.

சீர்மணக்குந் திருவருட்பாத் திருமுறைக ளாறுந்
திகழ்மரங்கல் லாதிகளுங் கசிந்துருகச் செய்த
பேர்மணக்கு மருட்பிரகா சப்பெருமான் றளைப்
பீடுபெறத் தன்மனத்து ளேநிறுவுங் கீர்த்தித்
தார்மணக்குங் கந்தசுவா மிக்கவிஞ னெங்கோன்
சமரசா தீதநா மாவளியென் றோர்நூ
லேர்மணக்குஞ் சண்மதத்தர் பாடிவியந் தாடி
யின்பமையும் பேறுபெற வியற்றிமகிழ்ந் தனனல். (க)

நேரிசைவெண்பா.

எந்தசுவா மிக்கு மினியநா மாவளிகள்
கந்தசுவா மிப்பேர்க்கலைவல்லோன்—றந்திடவு
மின்புவியெல் லாம்பரவ வேற்றினு னச்சியினின்
மன்சுப்ப ராயனுகோமான். (உ)

சென்னைநகர்ப் பண்டிதை

ஸ்ரீமதி-ம-மனோன்மணியம்மாள்

இயற்றிய

பன்னிருசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

நடராஜன் றிருவருளைக் கொள்ளைகொண் டேப்பமிடு நற்பொறபேய்ந்த, நங்கடிரு வருட்பிரகா சப்பெருமான் றிரு வடியை நாளுமேத்திக், கடலுலகிற் சண்மதவை தீகசமயத் தினர்கள் கனிவுவாய்ந்து, கசிந்துருகிக் கொண்டாடி நனி யேத்தித் துதித்திடற்குக் கருணையுற்றுப், படர்தாள ராகமு டனிசைப்பண்ணி னயம்பலவும் பதியும்வண்ணம், பகரினிய பற்பலநா மாவளிக ளழகழகாப் பரிந்துசொற்றான், இடவயல் சூழெழில்வள்ளற் பாக்கத்தி லினிதுவீற் றிருந்துவாழு, மெ னதாப்த சோதரனுங் கந்தசுவாமிக்கவிஞனிசைமிக்கோனே.

நேரிசைவெண்பா.

வள்ளற்பாக் கத்து வருங்கந்த சாமிநங்கோன்
வள்ளற்பாக் கத்துநா மாவளிகள்—வள்ளற்பா
வைங்கரன்சேய் மாதவன்மா லந்தணனென் மாபொதுமா
சங்கரிக்கு நன்குரைத்தான் சார்ந்து.

திருவேதுணை.

முகவுரை.

அநாதி முத்த சித்துருவாகிய பதியொருவனே, அநாதி பெத்தசித்துருவாகிய ஆன்மாக்களின் அநாதி கன்மவேறு பாட்டால், கருணைமுன்னிட்டுத் தான்கொண்ட மூர்த்தங்கள் எண்ணிலவாம். அவையாவும் "நவந்தருபேதமாக நாதனே நடிப்ப" னென்ற சித்தியார் வாக்கியத்தின்படி முதல்வனது ஒன்பது பேதத்துளடங்கும். இப்பேதங்காரணமாகக் கர்த்தாவின் அவசரபேதங்களும் பலவாயின. இக்கர்த்தாக்களைத் தனித்தனி யுபாசனை மூர்த்திகளாகக்கொண்ட சமயங்களும் பலவாயின. அங்ஙனம் பலவான வைதீக சமயங்கள் யாவுஞ் சண்மதத்துளடங்கும், அச்சண்மதத்தினரும், சமயாதீதமாகவிளங்கும் ஒரேதலைவன் அவ்வவ்வமயங்களில் வாய்ந்த அவசரமூர்த்திகளைப் போற்றிவருபவ ராயினமையின், அச்சமயர்கள் யாவருஞ் சமரசிகளேயாயினர். இவ்வுண்மையைநோக்கியன்றோ நமது "தாயுமானசுவாமிகளும்" "சமரசம் வருத்தநீ" யென்றும், "சண்மதஸ்தாபனமு" மென்றுங்கூறிப் போந்தனர். எமதாசிரியர் திருவருட்பிரகாச வள்ளலாரும், "ஒன்பான்வடிவாய்" "சமரசமெய்ந்நெறி" "உருநான்கும்" "விதியாகி" "இரவிமதி" "சமரசசன்மார்க்கம்" "எம்மதநிலையும்" என்ற வருட்பாக்களாற் கட்டளையிட்டிருக்கின்றனர். இவைபோன்ற

பரமாப்தர்களது பிரமாணங்கள் எண்ணில. இவையாவும் வேதாகமங்களின் சம்மதமென்பது சர்வப்ரசித்தம். இவ்வுண்மையைக் கடைப்பிடித்தொழுகு மவ்வச்சமய வன்பர்கள் தங்கள் தங்கள் மூர்த்திகளையும், அம்மூர்த்திகளின் தாதான்மிய சத்திகளையும், அன்பின் மிகுதியால் தோத்திரித்துய்யும் பொருட்டு, திருவருட்பிரகாசவள்ளலாம் எமது சற்குருமூர்த்திகள் அநுக்ஞையைச் சிரமேற்கொண்டு, ஆன்றோர் சற்சாம்பிரதாயத்தி னுடன்பாடாக "சண்மதசமரசாதீத சித்விலாசநாமாவளி" எனவோர் நூலியற்றினம். இந்நூலினிடத்தே சண்மதக்கடவுளர்க ளின்னாரென்பதூஉம், இவர்களெல்லாமாயு மல்லவுமாயு நின்றவதீதப்பொருளின்னதென்பதூஉம், சமயாதீதக் கொள்கையினை நுண்மையா யுலகின்கண்ணே தாபித்துக்காட்டித் தோத்திரம் புரிந்துள்ள வடியார்களிற் சிலரின்னாரென்பதூஉம் வகுத்துள்ளேம்.

சர்வ சாதாரணமா யாவருந் தோத்திரிப்பதற்குச் சுலபமாய் வகுத்த விந்நாமாவளிக்கு இராகதாளங்களமைதி யுள்ளனவேயாயினும், இராகங்கள் அவ்வக்காலங்களுக்குத் தக்கபடி சங்கீதப்புலமையோர் பாடிக்கொள்ளுந் திறத்தினையுடையராகலிற் பெரும்பாலுங்குறித்திலேம்.

இங்ஙனம்,

துர்முகி ஞு மிதுனரவி. } ச. மு. க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை.

திருவருட்பிரகாசவள்ளலார் திருவடிவாழ்க.

சண்மத சமரசாதீத சித்விலாச

நாமாவளி.

வெண்பா.

உலகிலுளார் யாவருக்கு முண்மையுணா வேதத்
திலகியலா மூலநிலை யெந்தாய் - பலவ்வகையாஞ்
சற்சமய ருஞ்சுத்த தத்துவசிற் சித்திபெற
நற்சமநா மாவளியை நல்கு.

விருத்தம்.

உத்தரசிற் சிதம்பரத்தே யுண்மைதருஞ் சித்தநட் முகக்குந்தேவே
சுத்தபர மாரிடர்க டுணிவிதென வோங்காரத் தொனியாற்சுட்டுஞ்
சத்துவ சிதாநந்த நிருத்தசித்திக் கணபதியுன் றனித்தாட்போற்றிப்
பத்திசெயச் சமரசமாம் பஜனைநா மாவளியைப் பாலிப்பாயே.

பரசிவம்.

வெண்பா.

ஆனந்தத் தாண்டவஞ்செ யம்பலவா வுன்னருளாற்
றானந்த மில்லாத் தகுதிபெறத் - தானுந்துஞ்
சண்மதத்து மொத்த சமரசா தீதமுறு
முண்மைகொளு மாவளியை யோது.

திருவருட்பிரகாசவள்ளலார்.

வெண்பா.

நித்தியா நித்தியத்தை நிச்சயித்தா லுட்டோன்று
முத்தியோ கம்பஜனே யுண்மையென்றார் - சித்தர்
இருட்பெரு மாயைதரு மீனந் தவிர்க்கும்
அருட் பிர காசவள்ள லார்.

விருத்தம்.

திருவி ருந்திடு தெய்வத் தாமரை மலர்ச்செய்ய
வுருவி ருந்திடும் பதமல ருவப்பி னென் றலைக்கே
பெருவி ருந்திடு மருட்பிர காசனார்ப் பெருஞ்சீர்
வருவி ருந்திடும் வாயதே வாழிநீ டூழி.

கணேசர்.

இ - நாட்டை - தா - ஜம்பை.

அங்குச பாச வல்லபை தன்மணாளா
அறுமுகன் றுணைவ சத்துவ சிற்குணாளா. (க)

இ - ஆரபி - தா - ஆதி.

ஆகுவா கனன் ரண பதியிறை மகனே
அம்பிகைதனயன் முக்கண்ணன் கஜமுகனே. (உ)

சங்கராபரணம் - ஆதி.

ஆலமுண்ட முக்கண்ண னருமகனே
ஞாலமுண்டிடுங்கண்ணன் மருமகனே. (ரு)

தோடி - சாப்பு.

உண்முகவிமுதமா யொளிசெயோம்பிரகாச
மோங்குமெய்யின்பமே யுற்றதிருவுருவா
சண்மதசமரசா தீதசித்விலாசஞ்
சாருநாமாவளி சாற்றும்வகைபுரிவாய். (ச)

கமாஸ் - சாப்பு.

உத்தரஞான சித்திபுரத்தமர் சித்திவிநாயகனே
உத்தரஞானசித்தியெனக்கருள் வித்தகதாயகனே. (ரு)

பரசு - ஆதி.

எவன்முருகனுக்குமுன்னவன்மனமே
அவனுபய சரண நினைதினமே. (சா)

ஆனந்தபைரவி - ஜம்பை.

எவன்யாவுமுழுதுமுடித் திடுமிறைவன்மனமே
அவன்வேழ முகக்கடவு ளாகநினைதினமே. (எ)

கல்யாணி - ஆதி.

எவனெவைக்குமுதல்வ னநுதினமே
அவன்றிரு வடிகளை நினைமனமே. (அ)

சஹனு - ஜம்பை.

கங்கைசுதனுல்வாயன் கதிர்வேலன்முன்னோன்
கங்குல்பக லோயாது துதிசிலர்தன்னோன். (கூ)

பியாகடை - சாப்பு.

கஜகர்ணிகா விலம்போ தரனே
கபிலேச சுக்லாம்பர தரனே. (௧0)

பைரவி - ஜம்பை.

கந்தபூர்வஜ தூமகேதவே நமவே
கஜுத்யக்ஷா விக்னராஜாய நமவே. (௧௧)

சாவேரி - ஜம்பை.

காமன் மைத்துன சிந்திதார்த்த சித்தீசா
கருணை தருவாய் கணக்ரீட புத்தீசா. (௧௨)

நாதநாமக்ரியை - ரூபகம்.

சித்தரிதய கமலமமர் சித்தி விநாயகனே
சித்தியியல்விரிவகையருள்சித்திபுராதிகனே. (௧௩)

செஞ்சுருட்டி - ரூபகம்.

சித்தருமுத்தரும்பத்தரும்போற்றிடுஞ் சித்திவிநாயகனே
சித்தநிலைத்தொரு பற்றுமிலாசருள் முத்திவிதாயகனே. (௧௪)

காப்பி - ஆதி.

சித்திபுத்திமருவுஞ் சொரூபவாதியே
சுத்தபத்தியருளுஞ் சுப ஜோதியே. (௧௫)

காம்போதி - ஜம்பை.

சித்திபுத்தி மருவும்வர சித்தி கணதிபனே
சித்தமுத்தியெனக்கருளுஞ்சித்திபுராதிபனே. (௧௬)

பியாக் - ஜம்பை.

சித்திபுரத்தமர்கின்ற சித்திவிநாயகனே
சித்திநிலைத்திடவருளு நித்தியதாயகனே. (௧௭)

தன்யாசி - ஆதி.

சித்திவல்லபைமகிழ் சித்திவிநாயக சித்தகணாதிபனே
சித்திவல்லமையுறு சித்தர்பராவிய சித்திபுராதிபனே. (௧௮)

கேதாரம் - ஆதி.

சித்திவிநாயக சத்தியனே
சித்திபுராதிப நித்தியனே. (௧௯)

தனுசரி - ஆதி.

சித்திவிநாயக சிற்குணனே
சித்திபுராதிப நிர்க்குணனே. (௨0)

பூரிகல்யாணி - சாப்பு.

சித்தி விநாயகர் திருவடி தஞ்சம்
பத்தியுடன்பணி பவர்க்கிலைவஞ்சம். (௨௧)

கேதாரகௌளம் - ஆதி.

சித்தி விநாயகர் திருவடியே
சேவிக்குமவர்முடிக்கணிமுடியே. (௨௨)

சாரங்கா - சாப்பு.

சித்திவிநாயகர் தோத்திரமே
முத்தியையீகின்ற சாத்திரமே. (௨௩)

எதுகுலகாம்போதி - சாப்பு.

சித்திவிநாயகர் பொற்பதமே
சீவர்கள்வாழ்கின்ற நற்பதமே. (௨௪)

மோகனம் - ஆதி.

சித்தி விநாயக வள்ளல் நோக்கம்
சேர்வதுசெல்வநிறை வெள்ளப்பாக்கம். (௨௫)

முகாரி - ஆதி.

சித்திவிநாயகனைப் பாடுவோரே
சித்தியெலாம்பெற நாடுவோரே. (உசு)

ஹம்ஸத்வனி - சாப்பு.

சுமுகாயவக்ரதுண் டாயநமவே
சூர்ப்பகர்ணஹேரம் பாயநமவே. (உஎ)

உசேனி - ஆதி.

மகா கணதிபதி வருவாயே
மரணமிலாதபதி தருவாயே. (உஅ)

செஞ்சுருட்டி - சாப்பு.

மகோதர விக்னவர்த்தன் தேவசிங்கமே
மதோத்கடவிபுதமாற்றறி யாததங்கமே. (உகூ)

தேசிகதோடி - சாப்பு.

மூவிரண்டாதார மூலவனே
மூஷிகவாகன மேலவனே. (௩0)

எமுநாகல்யாணி - ஆதி.

விக்னவிநாயக வேகதந்தனே
விகடகணாதிப பாலசந்த்ரனே. (௩க)

சுருட்டி - ஆதி.

வேழமுக வைங்கர விக்னகரனே
வெண்பிறைக்கோடவெம்பவஹரனே. (௩உ)

சுப்பிரமணியர்.

இ-தர்ப்பார்-ஜம்பை.

அதிபல பராக்ரநவ வீரர்பணி ப்ாதா
அறிவறிபரார்த்தபர ஞானமணிநாதா. (க)

சாப்பு.

அதுவிதெனவரியபொருளருளுமொருகுருவே
அடியவர்க ளிதயமதி லமரவரு மருவே. (உ)

ஜம்பை.

அமராதி பதிதருகுஞ் சரிமோகனு
அகிலமொருநொடியில்வருமயில்வாகனு. (௩)

ஜம்பை.

அமலஞான விசாக வேதசிரபாதா
அகிலலோகப்ரதாப தேவகுருநாதா. (ச)

ஜம்பை.

அரியநற்கீரர் திரு முருகாற்றுப்படைக்குவந்
தவரொடாயிரவரின் சிறையைத்தீர்த்தவனே
அவுணர்குலநாசமுற மதிசூடிநுதற்கண்ணி
லாறுபொறியாய்வந்த சரவணேற்பவனே. (ரு)

ஆதி.

அறுமீன்காதல கங்கைசுதனே
அடியார்க்காதார துங்கபதனே. (சா)

ஜம்பை.

அன்னவயனகமதற முன்னமருள் போதா
என்னதகமலர்மிசையி னென்றுமொளிர்பாதா. (எ)

சாப்பு.

ஆண்டலைக்கொடியோன்செவ்வேள்வாகுலேயன்
அற்புதக் குழகன் பாவகி மாகதேயன். (அ)

ஜம்பை.

கணபதி தனக்கிளைய சுகுமாரதந்த்ரா
கருதுமடியார்க்குறுதி யுறுசீலமந்த்ரா. (க)

சாப்பு.

கந்தகாங் கேயவர சத்திகரனே
கார்த்திகேயகுகேச சித்திபுரனே. (க0)

ரூபகம்.

கருவிகளைந்த வறிஞர்மனதைக் கவர்ந்தசுகுணதரனே
கலைகளறிந்த புலவன்சிறையைக்கடிந்தபுனிதவுரனே. (கக)

சாப்பு.

கலையுணர்புலவன்சூர்ப் பகைவன்சுரேசன்
கவுரி நந்தன னன்பர்க் கபயகரேசன். (கஉ)

ஆதி.

குருபர சரவண பவகுகனே
குறைவறுவரமருள றுமுகனே. (கஙு)

சாப்பு.

குறிஞ்சிக் கிழவனருட் கோமானே
குன்றமெறிந்தோன்வள்ளி சீமானே. (கச)

ரூபகம்.

சரவணபவ சாமிநாத சங்கரசுத சரணமே
சமரசசிவஞானபோத சண்முககுக சரணமே. (கரு)

சாப்பு.

சாமிநாதா தீர வசுரகுலகாலா
சார்வபௌமாவீரவிஜயவடிவேலா. (௧௬)

ரூபகம்.

சிவகுருவெனவேதகேசமொளிர்பரனே
நவநவவடி வாகுஞான கரதரனே. (௧௭)

ஆதி.

சிவசண் முககுக சின்மயனே
தவவுண்முகர்பணி தன்மயனே. (௧௮)

சாப்பு.

சினமிகுந்த சூராதி முனமிகந்த வேலஞான
சிற்குண மோனர் மனோகரனே
தனமிகுந்த மாகமாது வரமடர்ந்த கானமாது
சார்ந்திடு தோள குணாகரனே. (௧௯)

ஆதி.

சுரபாஸ் கரதிரி புரபவனே
சுகுணாலயதிக ழொளிபவனே. (௨௦)

சாப்பு.

சேந்தன்சி லம்பன்கிரு பாகரனே
செங்கல்வ ராயன்ஞா னாகரனே. (௨௧)

ஆதி.

தணிகா சலபவ மொழிபவனே
பணிவார்கொடுவினை துணிபவனே. (௨௨)

ஆதி.

தத்துவச்சுக மேவுறவேயருள் சத்திபராதிபனே
தித்திமிப்புறு மாமயில்வேலவ சித்திபுராதிபனே. (௨௩)

சாப்பு.

தாருகனை வென்றவடி வேல்முருகா
தாலமுழு துண்டதிரு மால்மருகா (௨௪)

ஜம்பை.

திரிபுராந் தகபால சுரவந்திதா
தீனஜன பரிபால வரசிந்திதா (௨௫)

சாப்பு.

திருப்பரங் குன்றஞ்செந் தூராவி னன்குடி
திருவேர கஞ்சோலை மலையானே
பருப்பதந் தோறுஞ்சென் றூடலுஞ் செய்திடும்
பரிபூ ரணநிலை கலையானே. (௨௬)

சாப்பு.

தினகரர் மழுங்கு கலபம தடங்கு
திகழ்ப்ரணவ வொளிமருவு தாளா
திடமலை நொறுங்க வவுணர்க ணடுங்க
செருவில்ஜெய முறுபனிரு தோளா. (௨௭)

ஜம்பை.

தெரிவைமுரு காவெனவொர் கரமுதவு தேவனெனுந்
திரிபுரையின் பாலவயி லிலகுகரனே
திருமருவு கூடலுறு சம்ணர்கழு வேறவுளந்
திகழ்கவுணி யோர்கள்குல திலகபரனே. (௨௮)

ஆதி.

தேஜோ மயசிவ தாயகனே
தேவகுஞ்சரிவள்ளி நாயகனே. (உகூ)

சாப்பு.

தேவராஜன்வணங்கு விப்ரகண்யனே
பாவநாச கடம்ப சுப்ரமண்யனே. (௩0)

ஆதி.

பன்னிருகரசயி லொளிபவனே
பால குமரபரி புரபவனே. (௩க)

சாப்பு.

மரகத மயூரபுவ னேஸ்வரனே
மதிவதன சண்முக ஷடாக்ஷரனே. (௩உ)

ஆதி.

மலையவகத்திய ஞரியனே
மலமதறுத்திடு சூரியனே. (௩௩)

ஐம்பை.

மறலியை யுதைத்த மகதேவ குருநாதா
மரண சனனக்கொடுமை மாயவருள் தாதா. (௩௪)

ஐம்பை.

முன்னை வினை யொழிசெய் துயர் முத்திதரு வோனே
தன்னைநிகர் பரவுணர்வு தன்னிலொளிர் வானே. (௩௫)

ஆதி.

வடிவேலா மறைமூலா
வந்தெனையாண்டருளுமைபாலா. (௩௬)

அம்பிகை.

இ - ஆனந்தபைரவி - ஆதி.

அகிலாண்டநாயகி யாரணியே
அம்பிகை நாதனி நாரணியே (க)

ஆதி.

அம்பிகை சுந்தரி யபயகரீ
அம்பரி யம்மை யமுதலகரீ (உ)

ஜம்பை.

அரியேறி விகடை மங்கலை யமரியே
ஆனந்தி விசயை மாதரி சமரியே. (ஙா)

ஜம்பை.

அற்புத விராட்டுருவ வசுர காதகியே
அகண்ட சித்ரூபி சிவஞான போதகியே. (ச)

ஜம்பை.

அன்னை யாதி வராகி யாதார முத்தியே
அம்பணத்தி பவானி பூதார சத்தியே. (ரு)

ரூபகம்.

ஆயி சுலக்ஷணி யாரியை யமுதவல்லியே
ஐம்பத்தோ ரக்ஷரி பனை குமுதவல்லியே. (சு)

ஆதி.

ஆனந்தபைரவி யானந்தக் கொடியே
அமலசுகி மதங்கி மலர்க்கொடியே. (எ)

சாப்பு.

ஒண்டொடி க்ருபாகரி யுருத்ரி யோங்காரி
உத்தமி சடாக்கரி யொருத்தி ரீங்காரி. (அ)

ஜம்பை.

கருணா கடாக்ஷி யுமை யங்கயற் கண்ணியே
கலையூர் தி சூக்ஷி யரவிந்தை முக்கண்ணியே. (கூ)

ஆதி.

கருணை புரிவாய் சிவகாம வல்லித் தாயே
தருணமிதென் றுன்ருளிற்ருழ்ந்தநான்சேயே. (க0)

ஆதி.

காத்யாயனி கருணாகரியே
காமகோடி சுகுணாகரியே. (கக)

சாப்பு.

கார்த்திகையரசி கற்பக் வல்லியே
கதிப்ரதை மாதினி மலைவல்லியே. (கஉ)

ஜம்பை.

சண்டி யீசுவரி த்ரிபுரதகனி சுபகரியே
சர்வஜன பரிபாலி சதுரி தினகரியே. (கங)

ஜம்பை.

சதாநந்தி த்யாகி சண்பகவல்லியே
தடாதகைச் செல்வி யம்பரவல்லியே. (கச)

சாப்பு.

சர்வ ரக்ஷகி த்ரியம்பகி ஜனார்த்தனியே
சக்ரபாணி சமர்த்தி மகிடமர்த்தனியே. (கரு)

ஆதி.

சவுந்தரி பூரணி சலக்ஷணியே
சாம்பவி காரணி விலக்ஷணியே. (கசு)

ஆதி.

சிவகாம வல்லியைப் பாடுங்கள்
சிவசிவ வென்றுகூத் தாடுங்கள். (கஎ)

சாப்பு.

சிவசத்தி குலதேவி சிற்சத்தி சீலி
சித்ரூபி கௌமாரி சிவையுக்ரி நீலி. (கஅ)

ஆதி.

சுதந்தரி விபுலை துரந்தரியே
சுமங்கலை விமலை நிரந்தரியே. (கசு)

சாப்பு.

செம்மனச்செல்வி யந்தரி சிற்சொரூபி
சிவகாம வல்லி யம்பர மந்த்ர ரூபி. (உ0)

சாப்பு.

தனுத்ரி மால்சோதரி தபோதகி த்ரிசூலி
தவமடந்தை யகோரி தற்பரை கபாலி. (உக)

ரூபகம்.

திரிபுரை குண்டலி பைரவி ஜீவ தயாபரியே
திகம்பரி சங்கரி பார்வதி தீன தயாபரியே. (உஉ)

சாப்பு.

திருவளர் சிவகாமவல்லி தெய்வமே
ஒருமையொடுனைநாளும்பஜனைசெய்வமே. (உங)

சாப்பு.

நல்லார்வாழ்சித்தி நகரி லிலக்குமி
நாராய்ணப் பெருமாள் சோதரியே
கொல்லாநெறிதனை யெல்லாரும் பெற்றுய்யக்
குணமருள் தந்தெனை யாதரியே; (உச)

ஆதி.

நாத நாயகி நாராயணியே
நாரதாதியர் பாராயணியே. (உரு)

சாப்பு.

நித்யகல்யாணி காமாக்ஷி நிர்க்குணியே
நிமலி மாதேவி மீனாக்ஷி சிற்குணியே. (உசு)

ரூபகம்.

நீலகண்டி வேதமுதல்வி நேமிப் படையாளே
நிர்விகாரி வாமிபுவனை யேமக் கொடையாளே. (உஎ)

சாப்பு.

பகவதி சதாநந்தி பாலலோசனியே
பதிதபாவனிகுமரி பவவிமோசனியே. (உஅ)

சாப்பு.

பராபரி சிவாயி பரநாத பரம்பரியே
பருப்பதி குகாயி யழியாத வரம்புரியே. (உசு)

சாப்பு.

பரிபூரணி யகோசரி பராசத்தியே
பரமேசுவரி குகாரணி நிராசத்தியே. (ந௦)

ஆதி.

பர்வ தவர்த்தனி பண்கொடியே
பத்மையியற்சபை பெண்கொடியே. (நக)

சாப்பு.

பாசாங் குசத்தி ப்ரணவத்தி பரமாயி
பவநாசி துர்க்கி கேத்திரனந் மகமாயி. (நஉ)

சாப்பு.

பிரியகளா சர்வாணி பெரிய நாயகியே
பிரகாசி யயிராணி யுரிய தாயகியே. (௩௩)

ஆதி.

பொற்கொடிகமலை புராதனியே
புங்கவி கௌரி நிராதனியே. (௩௪)

சாப்பு.

மலைமங்கை யமலை மரகத வல்லியே
மகதேவி பவஹரி யிமய வல்லியே. (௩௫)

சாப்பு.

வனிதை புவனபதி சந்திரி மனோன்மணியே
வடிவி வெண்டோளி கந்தினி யருண்மணியே. (௩௬)

சிவம்.

ஆதி.

அன்ப ரின்ப மேய வருளை யருளு நடன வமலனே
அதுல வகள வநக வசல வருண கிரண விமலனே. (க)

சாப்பு.

அருண்மூர்த்தி நிகேதனன் சூலியனுமயனே
அருணுத னுமாபதிநந்தி சுகோதயனே. (உ)

சாப்பு.

அம்மையப்ப ன்கோர மூர்த்த னனந்த தினகரனே
அட்டமூர்த்த னபார கீர்த்தன மன்னுகுணகரனே. (௩)

ஆதி.

அவிவர்த்தன வைம்முக பவஹரனே
அரிமர்த்தன பாண்டியற் கருளரனே. (ச)

சாப்பு.

அந்தகாரி கபாலி யழலேந்தி
அழலாடி யோகி மானிடமேந்தி. (ரு)

ஆதி.

அந்தணச் சிறுவர்க்கென்றும் பதினாறு கொடுத்தவனே
அம்பலத் துப்மன்யர்க்குப் பாலாழி விடுத்தவனே. (சா)

ரூபகம்.

ஆகமாந்த வாரணாந்த வப்ரமேயனே
ஆலமுண்டநீலகண்டவக்ரதேயனே. (எ)

சாப்பு.

ஆதார வாதேய மணிநீதனே
ஆரூரர்சொன்மாலையணிபாதனே. (அ)

ஜம்பை.

ஆருயிரைக் கொன்றருந்து மற்பர்தமை யழித்திடுவென்
றரியசித்தி யெனக்களிக்கி லடியரிகழ் வாரோ
ஆனையுரித் தார்புரத்தை யட்டகறை மிடற்றவரென்
றமரர்சித்தர் முனிவர்முத்தரவர்கள்புக ழாரோ. (கூ)

ஆதி.

ஆல்மர் கடவுணீ றணிந்தோனே
அநந்தா நந்தனர வணிந்தோனே. (கO)

சாப்பு.

ஆழ்வாரி நஞ்சுண்ட வமரர்கோவே
ஐந்தானனங்கொண்டவமலதேவே. (கக)

சாப்பு.

இன்பவடிவானவேகாந்த விறைவா
இடப வாகன சிதாகாச நிறைவா. (கஉ)

சாப்பு.

உமையவளொருபாகவிடையவனே
உயர்வற வுயர்நல முடையவனே. (கங)

சாப்பு.

உயிர்க்குயி ரான்கறை மிடற்றவனே
உயர்ந்தவர்வெவ்வினையடற்றவனே. (கச)

சாப்பு.

உலக மனைத்தையும் பெற்றிடு முத்தமி
யுடனிட பத்தினில் வருவாயே
உனதருள் பெற்றிடுஞ் சித்தர்கள் முத்தர்க
ளுட்னுற வெற்கருள் தருவாயே. (கரு)

சாப்பு.

உன்னத கடாசல வுரிப்போர்வை யானே
உற்பத்தி திதிநாச முப்பார்வை யானே. (கசா)

ரூபகம்.

ஊனதாதுபோதமோவவோதுயோகபூமனே
ஞானதாது மேவுவேத நாதகீத வோமனே. (கஎ)

ரூபகம்.

ஐந்துமலமும் வெந்துவிழவோ ரைந்தையருள்செ யழகனே
ஐந்துமொன்று ளமையுநிலையு மளியினருள்செய் குழகனே. (கஅ)

ரூபகம்.

ஒழுக்க நிரம்ப மழுக்கை யேந்து முரகபூடணு
அழுக்கண்தொலைக்கக்குழக்கணேங்கியமர்சுகோடணு. (ககூ)

ரூபகம்.

சங்காதர சசிசேகர காமபுரவாா
சங்காதரிபுரமேவுறுசாமசிரதாா. (உ0)

சாப்பு.

கால காலன் சுடலை யாடி கங்காளன்
கண்ணுதற்ருனுமேவுறார்ந்தவெண்டோளன். (உக)

சாப்பு.

குணரகித விற்பன குபேரமித்திரனே
குருதுரிய நற்பத விநோதசித்திரனே. (உஉ)

சாப்பு.

சந்திரசேகரசதுர சைலவில்லவனே
சர்வகாரணசகுண சர்வவல்லவனே. (உங)

ஆதி.

சர்வேசுர சமரச சத்தியனே
சர்வாதர சசிதர நித்தியனே. (உச)

ஐம்பை.

சாமகீத ப்ரபாவ சடமகுட தரனே
சாமகண்டப்ரதான சகலகுணவரனே. (உரு)

ஆதி.

சித்தர்பணிதூயா வித்தமருள்வாயா
சித்திபுர நேயா சித்தமிரங் காயா. (உசு)

சாப்பு.

சித்தி புரத்தமர் சிவலோக நாதா
சித்திகொடுத்தருள் சிவஞானபோதா. (உஎ)

ரூபகம்.

சிந்தைகொண்டு தொண்டுமேண்டு சிங்கதுங்க ரின்பனே
திங்களண்டு கங்கையங்க செங்கணென்று மன்பனே. (உஅ)

சாப்பு.

சிவகாம வல்லிமகிழ் சிவலோக நாதா
தவயோகர்நாடுமுயர்சிவஞான போதா. (உகூ)

ஆதி.

சிவலோக நாதனை யணைந்தவரோ
சிவகாமியெனும்பேரிணைந்தவரோ. (ஙO)

ஆதி.

சிவலோக நாதனைக் கண்டவரோ
சிவகாமியெனும்பேர்கொண்டவரோ. (௩௧)

ஆதி.

சிவலோக நாதர்வாழ் திருநகரம்
செல்வர்கள்சூழ்புவிக்கொருசிகரம். (௩௨)

ஆதி.

சிவலோக நாயகர் பொருந்திடமே
தவயோகர்யாவரும்பெறுந்திடமே. (௩௩)

ஆதி.

சிற்சபா நாதனைப் பாடுங்கள்
சிவசிவவென்றுகூத்தாடுங்கள். (௩௪)

சாப்பு.

சுத்தருளத்தினி லொத்துளதத்துவ சுந்தரேசனே
நித்தவநித்தியமிற்றெனவுட்கொளநின்றநேசனே. (௩௫)

சாப்பு.

சூலபாணி சுயம்பு ஜோதிமயனே
சூக்மதரிசனமோனஞானவயனே. (௩௬)

ஜம்பை.

தலைமாலை பூண்ட சங்கர சதா சிவனே
தனிமுதல்வவாதிநடுமுடிவிலாதவனே. (௩௭)

சாப்பு.

திரிபுராந்தக த்ரியம்பக திகம்பரனே
திரிசூலவபயவொளிகரசிதம்பரனே. (௩௮)

சாப்பு.

திருநாவுக் கரையர்க்கை யாற்றினிற் கைலாச
தெரிசனங் காணவுகந்தவனே
திருநாவ லூரர்க்கா ரூரினிற் பரவையின்
தெருவினிற் றூதுநடந்தவனே. (௩௯)

ஆதி.

நந்திகேசுவரநடநாயகனே
நம்ப னகிலவர தாயகனே. (சo)

சாப்பு.

நரிபரியாக் கியஞான நடனநாயகனே
நால்வர்க்கருளியமோனநல்குதாயகனே. (சக)

ஜம்பை.

காதாந்த பததுவாத சாந்தநடு நிலையா
நாவரசர்கவிவாய்ந்தபதரசித மலையா. (சஉ)

ரூபகம்.

நிர்விகார கங்காதர நீக்கமிலாதவனே
நிர்விகர்ப்பநிருபாதிகநீக்கமிலாதவனே. (சங)

சாப்பு.

நிற்சல நிராதார நிரவயவதேஜா
நிஷ்கள நவாதீதநிமலநடராஜா. (சச)

சாப்பு.

பசுபதி புராந்தக பரானந்த புரண
பகவதிமணளபசுபாசாந்த சரண. (சரு)

ஆதி.

பத்தர்நிறையும்வள்ளற் பாக்கத்திலுறைவா
நித்திய சிவலோக நிமலவென் னிறைவா. (சசு)

சாப்பு.

பரவெளியன் முக்கண்ணன்பரவிந்திஞெளியன்
பரப்பிரமன் முடிவிலான் பரமுத்த வெளியன். (சஎ)

சாப்பு.

பரோப ரீணன் பகாநலனே
பார்வதிகேள்வன் மகாநலனே. (சஅ)

18

ஆதி.

பாதக மறுமழுக் கரத்தோனே
பதிநிலையுறுபஞ்சாக்கரத்தோனே. (௪௯)

ஆதி.

பாம்பா பரணமாகப் பூண்டவனே
பன்றிக்குட்டித்தாயாக வாண்டவனே. (௫0)

ஆதி.

பார்வதி புரத்தமர் பரமேசா
பார்வதிபுரத்தமர் பவநாசா. (௫௧)

சாப்பு.

பிஞ்ஞகன்விடையோன்பிநாகபாணி
பிறைசூடி காமாரி பரசுபாணி. (௫௨)

ரூபகம்.

புத்திநெறி யுற்றநிலை பத்திவழி முத்திதரு
புத்தமுத மொத்தவருட் பொன்னம்பல வாணா
சித்திநெறி சத்திபதி வுற்றவழி யொத்தருள்செய்
சிற்பரம நத்துமியற் சிற்றம்பல வாணா. (௫௩)

ரூபகம்.

புத்திபத்தி முத்திசித்தி பொருத்துபூரணா
நித்தசுத்த சத்தசித்த நிருத்தகாரணா. (௫௪)

ரூபகம்.

புரிசடை யோன்புராரிபுண்ய மூர்த்தனே
புனிதபிரான் பிறப்பிலான் பரார்த்தனே. (௫௫)

ஆதி.

பெருமான்வரன்கரியன்பேயோடாடி
பித்தனக்கன்கிரிசன் கொன்றைசூடி. (௫௬)

சாப்பு.

மங்கைபாகன்பூத நாதன்மஹேசன்
வாமதேவன்பாண்டரங்கன்கிரீசன். (௫௭)

ஆதி.

மதனதகனன்மாயையென்றவனே
மதியணிபவன்தூய மன்றவனே. (௫௮)

ரூபகம்.

மழுவாளி யுருத்திர வாமிபாகனே
மனமாயையறுத்தவர்ஞானபோகனே. (௫௯)

ரூபகம்.

மறக்கருணையு முன்றனுக்குளதா
வழுத்துமறை பொய்யாமோ
மறப்புலையையொ ழிந்தருட்செயலே
வழக்கமாகுதன் மெய்யாமோ. (௬0)

ஜம்பை.

மாசொறுத்தவரிடங்காசழித்தவனே
மாவசந்தனதுடற்றீ விழித்தவனே. (௬௧)

சாப்பு.

மாயையை மிதித்த மணிகண்ட பெம்மானே
மறலியை யுதைத்த சசிகண்ட வெம்மானே. (௬௨)

ஜம்பை.

முச்சுடரன் வியோமன்முயலகன்மீதமர் பாதன்
முத்துச்சிவிகையைக்காழிமுதல்வர்க்கருணீதன். (௬௩)

ஜம்பை.

வைகையங்கரையில்விளையாடும்பதனே
வாதவூ ரடிகள்மொழி சூடும்பதனே. (௬௪)

பிரமன்.

ஆரபி-சாப்பு.

அன்னவாகனசதுர் வேதபாராயண
வணுவாதியகிலாண்ட தாயகனே
பின்னவேதனமன மாதிநாலாமுக
பிரமாண்டமகிதூண்டு நாயகனே. (௧)

ஆதி.

அன்னவூர்தி சன்மத னந்தணனே
அயன்சயம்புபங்கயனென்கணனே. (உ)

ஆதி.

உலகெலாம்படைத்திடும்பண்ணவனே
ஓதிம மூயர்த்திடும் விண்ணவனே. (ங)

ஜம்பை.

எனக்குடலையருளவினியேனுஞ்சலியாதோ
இகத்திற்பரமசுகமதி னுளும் பலியாதோ. (ச)

ஆதி.

கமலவூர்தி திசை முகபா விபுவே
கருவிலென்னைவிதியாதருள்பிரபுவே. (ரு)

ஆதி.

சரோருகன் சுரவன் மலரவனே
சரோஜிபிரமனெனமிளிர்பவனே. (சா)

ஆதி.

சித்திபுரத்தொளிர்சதுமுகதேவா
சத்திய தத்துவ வருடர வாவா. (எ)

ஆதி.

நான்முகத் தேவனை நாடுவோரே
நாட்டிற்பிறவாவகைதேடுவோரே. (அ)

சாப்பு.

பகவனிரணியகர்ப்ப னரவிந்தனே
பரமேட்டிதமநியன் சதானந்தனே. (கூ)

சாப்பு.

பாரதி கொழுனன் பிதாமகன் தாதா
பார்தந்தநாதன் விரிஞ்சன் விதாதா. (க0)

ரூபகம்.

மகர கேதனனை யருள் மாதவன்சுத வேதாவே
மலமுறு விதியையருள் மாதவர்பணிதாதாவே. (கக)

சாப்பு.

மண்பொதுத்தந்தை மறையவனே
மாலுந்தி வந்தோ னிறையவனே. (கஉ)

ஆதி.

மானத சரசுறை மாதவனே
மாதவசுதனெனுமாதவனே. (கங)

ஆதி.

வானோர் முதுவன்விதிமான்மகனே
வாணி கேள்வன்வர னான்முகனே. (கச)

ஆதி.

விரிஞ்சனை யுன்னித்தவஞ் செய்யுங்கள்
வேண்டிய வரங்கள்பெற் றுய்யுங்கள். (கரு)

ஆதி.

வேத ரஞ்சக கலைமகள்பதியே
விமல போத விப்பிரர் நிதியே. (கசு)

கலைமகள்.

பைரவி - சாப்பு.

அம்போருகிமறை யுணாபொருளே
அன்போடருளெனக் குனதருளே. (க)

ஆதி.

அம்போருகியுன தருளான்முடியா
வருஞ்செயலிலையெனத் தெரிந்தோமே
அடியேங்கண்மனப் படியேயருளென்
றுயிரம்வந்தனம் புரிந்தோமே. (உ)

ஆதி.

அருமையு மெளிமையு முனக்குரித்தே
அடியனுக் கருள்புரி பரவுரித்தே. (௩)

ஆதி.

அழியா நிலைபெறுத லுனதருளே
அடையா தவமுறுதல் பெருமருளே. (௪)

ஜம்பை.

ஆரணப் பாவையுன தடியாருக் கிவார்
ஆசுமுதல் வித்தார கவிவாண ராவார். (௫)

சாப்பு.

உந்தியி லுதித்த கமலன்மனை யொருத்தியே
உம்பரறி வரியவெண் ணெண்கலை கருத்தியே. (௬)

ஜம்பை.

உம்பர்வான முதனைய படிகமலையே
உனதருள்பெறூர்க்குநாவெழுதவிலையே. (௭)

ரூபகம்.

உரியஞான மூர்த்தியிசை மடந்தையுலக மாதாவே
உனதுகருணையின்றிசிருட்டிசெய்வதருமைவேதாவே, (௮)

ரூபகம்.

உமைமகளே யகிலாண்டமும் படைப்பவளே
உனதருளே பெறவார்வினை துடைப்பவளே. (௯)

ரூபகம்.

உமைமகளே யெளியவெனக் குறவருளும் வரமே
உனதடியா ரடியர்பதத் துகளணியுந் திரமே. (௧0)

ஆதி.

உலகி லெவர்க்குமுன் றன் றிருவடிதஞ்சம்
உனது புகழைத் துதிப் பவர்க்கிலைபஞ்சம். (௧௧)

ஜம்பை.

உலகிற்கொலை புலையிலாரோங்கிவா ழூதல்வேண்டும்
ஒருபெரிய வரமுதவெ னுயிர்க்காவியே
உசித சன்மார்க்க நெறியொன்றுமே நிலைபெறுக
உனதருள் செய்திடல்வேண்டு மொருதேவியே. (கஉ)

ரூபகம்.

உவண கேதனன் மருமக ளென்னும் பாரதியே
உனது பேரரு வடைபவர்க் கெங்குஞ் சீரதியே. (கங)

சாப்பு.

ஓதிம மூயர்ந்தோன் றனுவோங்குதேவியே
உன்றனை மறந்தா லிராதென்ற னாவியே. (கச)

ஆதி.

கண்டவர் பலவங்கை புகலாதே
கருணைசெயெனதுளமகலாதே. (கரு)

ரூபகம்.

கமலாசனத்திமறைமுடிமேவுபாவாய்
கருணை கரத்தி யறுபது நாலு மீவாய். (கசா)

ஆதி.

கருணை கரியுன தருட் பொருளார்
கவலை வறுமை யிடரினின்மருளார். (கஎ)

ஆதி.

கலாமயில்வல்லிசரோருகத்தாளே
கவீசுர ருள்ளமர் சிரகத்தாளே. (கஅ)

சாப்பு.

கலைக்கடலே கனியே நறுந்தேனே
கனவமுதே யனமே மனையானே. (ககூ)

சாப்பு.

கலைஞானத் தோகையைக் கருத்தில் வைப்பவரோ
கைவல்ய பரஞான மிகுத்த மெய்த்தவரோ. (உ0)

சாப்பு.

கலைஞானத் தோகை யருட்குருவே
கலைவாணி திங்க ணுதற்றிருவே. (உக)

ஆதி.

கலைதெரிந் தவர்புகழ் கலைமுதலாளே
கவிபயின் றிடவருள் சிலைநுதலாளே. (உஉ)

சாப்பு.

கலைமங்கை பலருக்குங் காரணியே
கமலந்தனி விருக்கும் பூரணியே. (உங)

ஜம்பை.

கலைமுழு துணர்ந்தவர் கருத்திலுறை பாவையே
கருணையுட னென்றனக் கருள்புரிநின் சேவையே. (உச)

சாப்பு.

கலையெலா முணரவருள் கற்பகத்தருவே
கமல வூர்தியைமருவு சிற்கலைக்குருவே. (உரு)

சாப்பு.

கலைவிதிக்குந்தவள முளரிமின்னே
கருணைதந்தாளெமக் குரியவன்னே. (உசு)

சாப்பு.

கற்றவர்க் குன்றனருள் வலிதாகுமே
கல்லாவென் போல்பவர்க் கெளிதாகுமே. (உஎ)

ஆதி.

காதக ருறவினி வையாதே
காலனென்னெதிர்வரச்செய்யாதே. (உஅ)

ரூபகம்.

காளமேகன் காளிதாசன் கம்பனௌவை வள்ளுவர்முதல்
கணக்கிலாத புலவர்களுக்குங் கருணைசெய்த தறமோ
காமமோகங் கோபதாபங் களவுவஞ்சம் பொய்முதலிய
கடுங்குணம்பல வுங்கொளுமெனைக் கைவிட்டிடுத லறமோ. (உகூ)

ஜம்பை.

குலவு மாத்திகர் வாழக் குணம்பலவும் புரிந்தாய்
கொடிய நாத்திகர்சூழக் குறையெதுவுந் தெரிந்தாய். (௩௦)

ஜம்பை.

சத்துவ ஷடாந்த சமரச சுத்த சன்மார்க்க
சங்கம்பெறு மவர்தெரிந்து சாற்றுவர்நின் றுதியே
தத்துவ கலாந்தநிலை யொருசற்று மறியாத
தன்மையனென் புகல்வதுவெண் சலசமுறு மதியே. (௩க)

ஆதி.

சரசுவதி வெண்மனை நிறத்தவளே
சருவ ஜனுதர வறத்தவளே. (௩௨)

சாப்பு.

செந்திருவே யனமே கிளியே யென்றுந்
தெவிட்டாத தேனே மடப்பிடியே
செல்வமுங் கல்வியு ஞானமு மழியாத
சீர்தரல் வேண்டுந் தவக்கொடியே. (௩௩.)

ஜம்பை.

தமிழ்க்கொடி கலைமகள் சாவித்ரியே
தண்டாச் சிறப்பினள் காயத்ரியே. (௩௪)

ரூபகம்.

துன்மார்க்கர் கொடுங்கோ லினியேனுங் கலங்காதோ
துகளற்றவர் செங்கோலுல கெங்குந் துலங்காதோ. (௩௫)

சாப்பு.

நாம்பிரம மென்பவர்கண் மலைவிலக்கே
நாயடிமை யென்பவர்கண் மலையிலக்கே. (௩௬)

சாப்பு.

நிகில வுலகும் படைத்தருள் சுகுண மலையே
நினதரு ளடைந்தவர்க் கெள்ளளவிட ரிலையே. (௩எ)

ஆதி.

நிமல சுகந்த கமல முறைந்த கலைமாதே
நினதருளின்றி நிலைபெறுவாரிலை நிலமீதே. (௩௮)

ரூபகம்.

பலகலை தேர்ந்தவர்க ளிதய பதுமநறுந் தொடையாளே
பகர்மறை யாகம முடிவெனு முபநிடதப் படையாளே. (௩௯)

சாப்பு.

பனுவலாட்டி பிராமி வாணி பாமகளே
பாமுதல்விசதுர்முகன் மனைவிநாமகளே. (௪௦)

சாப்பு.

பார்தந்த பங்கயன் பரிவுகொள் குயிலே
பழுதற்ற வர்க்குனருள் பாலிக்கு மயிலே. (௪௧)

ரூபகம்.

புலவர்மதி யெநாளு முலவு புதியமதியமே
பொறியின்வழிசெலாதருள்புரிபுனிதமதியமே. (௪௨)

சாப்பு.

புனிதவிதி யொழுகுவோர்க் கருள லறமே
புலைகொலைசெய் பவர்க்குநீ புரிதல் மறமே. (௪௩)

ஆதி.

பூங்கம லாசனி யார் பதமே
போற்றிவோர்பெறு வார்பதமே. (௪௪)

ஆதி.

பூரவாகினி தூய திருவடியே
புகலுமூவுலகவ ரணிமுடியே. (௪௫)

ரூபகம்.

பெருவாய்மையும் பொறைசீலமும் பெறும்பெரியவர் குருவே
பிரியாதென தகநாவிலு மிருந்தருள் பெருந் திருவே. (௪௬)

ஜம்பை.

மலர்க்கரத்தி லேமெணி வடமுமுடை யாளே
மதத்திரத்தி னுமேவர் மனதிலடை யாளே. (சஎ)

ரூபகம்.

மறைபயின்ற மலரோங்கிய பெண் டெய்வமே
மனமகிழ்ந்து கருணை புரிந்தா லுய்வமே. (சஅ)

ஜம்பை.

மாபாதக ருலகோம்புதல் மரபெனல் கலைமதியோ
மாதேவிநி னருளோர்ந்தவர் மறுகுதல் தலைவிதியோ. (சகூ)

சாப்பு.

மெய்ப்பொருளளித்தவாரணப்பாவையே
விற்பனற் கருளுங் காரணப் பூவையே. (ரு0)

ஆதி.

வண்டமிழறியா வகைபொறுத்திடுவாய்
வாணெடுங்கண்ணார் மயலறுத்திடுவாய். (ருக)

வி ண் டு.

இ - கமாஸ். தா - ஆதி.

அமரர்க ளதிபதி யயர்வற கனனே
அவமற சுடரடி தொழுதெழு மனனே. (க)

சாப்பு.

அரங்கத்தெம் மானெம்மை யாண்டவனே
அகிலங் காக்குந்தன்மை பூண்டவனே. (உ)

ஆதி.

அறிதுயி லமர்ந்தவ னெடியவனே
அரிந்தம னடியவர்க் கடியவனே. (ந)

ஆதி.

அனந்த சயன னுந்தி பூத்தவனே
அச்சுத னமரரைக் காத்தவனே. (௪)

ஆதி.

அயர்வறு மமரர்க ளதிபதியே
உயர்வற வுயர்நல மதிகதியே. (௫)

சாப்பு.

அண்டமெங்கு மொரடியதாக வளந்தஸ்ரீஹரி கேசவா
தொண்டரைவரையன்றுகாத்தருள் துரியமாமலைவாசவா. (௬)

சாப்பு.

அடியார்க்குத் தொண்டுசெய் யன்பருள் வாயென்றுள்
ளன்புடன் வேண்டினேன் ஸ்ரீராமா
படியாத பிள்ளை யானாலும் விடார்பெற்றோர்
பான்மைநன் றென்பர் பரந்தாமா. (௭)

சாப்பு.

அன்பராம் பிரகலாத நாரதாதிதாசர்க்
கன்புடன் வைகுந்த மளித்தோனே
வன்ப னிராவணன் றம்பி சிரஞ்சீவி
வாழ்வுபெற் றோங்கக் களித்தோனே. (௮)

சாப்பு.

ஆழ்வார்கள் பன்னிரு வோர்க்கு மருள்செய்த
அடிநடு முடிவில்லா ஸ்ரீராமா
வாழ்வார்கள் வாழ்திருக் கோவலூரி னின்ற
வாமன னெனநவி லோர்நாமா. (௯)

ஆதி.

இருஷிகேசவ கோவிந்த முராரி
இராகவ பஞ்சவர் தூத நராரி. (௧௦)

ஆதி.

உயர்நல முடையவ னாரணனே
மயர்வற நலமருள் பூரணனே. (௧௧)

ஆதி.

உலகளந் தவனுல குண்டவனே
உலைய பூதகிமுலை யுண்டவனே. (௧௨)

சாப்பு.

உனையன்றி வேறொரு தெய்வமுண் டென்கின்ற
உணர்ச்சி யொருநாளு முற்றறியேன்
அனையன்றி சேய்க்கொன்று மாதர விலையெனும்
அன்ப ரனுபவம் பெற்றறியேன். (௧௩)

சாப்பு.

கரிவரதன் சம்பு கமலக் கண்ணனே
காகுத்தன்சக்ரி கொண்டல்வண்ணனே. (௧௪)

சாப்பு.

கருடகேதன பத்மநாப கடல்வண்ணா
கரியகேசவ சன்மகில மணிவண்ணா. (௧௫)

சாப்பு.

கல்லாத நாயேனுக் கெல்லா நலமுங்
கருணை செய்வாய் ஸ்ரீமந்நாராயணா
பல்லா யிரங்கோடி தேவர் முனிவர்
பலரும் புகழ்வேத பாராயணா. (௧௬)

சாப்பு.

காராய வண்ண மணிவண்ண கமலாக்ஷ
காரண விலக்குமி நாரணனே
சீராய பின்னை மனுமன்ன கமலத்தாய்
சேர்தரு லக்ஷண பூரணனே. (௧௭)

சாப்பு.

குவலய குருபஜ கோவிந்த மென்றூர்
குணம்பெறுவோரன்புகொண்டுநவின்றூர். (கஅ)

சாப்பு.

கொலைபுலை யறுக்குஞ் சக்கரத்தோனே
நிலைநெறி யுறுமெட் டக்கரத்தோனே. (கசு)

ஜம்பை.

கொலைபுலைகள்செய்யுமவர்குறைநிறுவுவிபுவே
குவலயம் புரந்திடுசீர் குலவுமுரா ரிபுவே. (உ0)

சாப்பு.

கொலைபுலை யொருவிய குணத்தினர் சேர்திருக்
கோவலூர் வாழ்ந்திடுங் குணமலையே
மலைவுறு சமயங்கண் மதங்களென் றிடும்பெறு
மயர்வறச் சூழ்ந்திடு மணிநிலையே. (உக)

சாப்பு.

கொல்லா நெறியைக் கொடுக்கக் கரத்தினிற்
கோதண்டந் தாங்கிய கோமானே
எல்லா மிராம மயமென்று நல்லோர்க
ளேத்தும் பெருந்தேவி ஸ்ரீமானே. (உஉ)

சாப்பு.

கோதண்டாக் காங்கயற் கம்மானே
கோதண்டந் தாங்கிய பெம்மானே. (உரு)

ஆதி.

கோதறு முளநிறை கோவிந்தா
குறிகுணங் கடந்தபே ரின்பந்தா. (உச)

சாப்பு.

கோன்கண்ட குடியாகக் குறிக்கொண்ட வென்றன்னைப் பரமேசா
கோன்கொண்ட குடியாகக் குறிக்கொள்ள வருள்புரி ஜகதீசா.

சாப்பு.

கோன்மறந்தகுடிக் கெல்லாநலமுங்
கொடுக்கப் படாவென்பர் ஸ்ரீராமா
பான்மறந்தறியாத பாலனுக்கவ்விதி
பாலித்த னன்றோ பரந்தாமா. (௨௬)

சாப்பு.

சலசலோசன தராதர சக்ரபாணி
சலசயதுழாய்மௌலி சாரங்கபாணி. (௨௭)

ஆதி.

சித்தி புரத்தமர் நாரணனே
சித்தியெமக்கருள் பூரணனே. (௨௮)

ஆதி.

ஸ்ரீமந் நாராயணனைக் கண்டவரே
திருவிலக்குமிபேர் கொண்டவரே. (௨௯)

ஆதி.

ஸ்ரீமந் நாராயணனை யணைந்தவரே
ஸ்ரீபெருந்தேவியென் றிணைந்தவரே. (௩0)

ஆதி.

ஸ்ரீவரத ராஜனா நாடுங்கள்
திருவாய்மொழிப்ரபந்தம்பாடுங்கள். (௩௧)

சாப்பு.

தன்னுயிர் மன்னுயிர் தன்னுடல் மன்னுடல்
தானென்போர் குறைதீர்க்குங் கோவிந்தா
பன்னுங் கொலைபுலை பாதக மாதிகள்
பண்ணுமாபாவர்க் கெட்டாமந்தா. (௩௨)

சாப்பு.

திதிகர்த்தன் சௌரி ஜனார்த்தனனே
திரிவிக்ரமன் வேத கீர்த்தனனே. (௩௩)

ஆதி.

திரிவிக்ரமர் சந்நிதி நேர்ந்தவரே
திவ்யமங்களதேகஞ் சேர்ந்தவரே. (ரு௪)

ஆதி.

திருக்கோவ லூரெனுந் திருநகரம்
ஜீவர்கள் வாழ்புவிக் கொருசிகரம். (ரு௫)

ஆதி.

திருநாதன் மாதவன் சீதரனே
தேவகி மைந்தன் தாமோதரனே. (ரு௬)

சாப்பு.

திருப்பெயரா முன்னிரண் டெழுத்தன்றிச்
சிறுதேவர் நாமந் துதித்திலேன்
கருப்பிற் காலமெச்சிற் கையிற் காகமோட்டாக்
கசடர்கள் தம்மை மதித்திலேன். (ரு௭)

சாப்பு.

திருப்பெருந் தேவி மணாள நினையன்றிச்
சிறுதேவர் தம்மைத் துதித் திலேன்
விருப்பொடு நற்பதி புண்ணியஞ் செய்யாத
வீணர்கள் தம்மை மதித்திலேன். (ரு௮)

ஆதி.

திருமாலுக் கடிமைசெய் யென்றவரோ
தீவினை யாவையும் வென்றவரோ. (ரு௯)

ஆதி.

திருக்கோவ லூரனைப் பாடுங்கள்
கருக்கோடு தீருமென் றாடுங்கள். (௬0)

சாப்பு.

தில்லைக் கோவிந்தா வெல்லைக் கோவிந்தா
நெல்லைக் கோவிந்தா வல்லற்றீ ரெந்தாய். (௬௧)

சாப்பு.

தெருணெறியுளருறை திருக்கோவிலூரன்
வெருணெறி யறுதிரி விக்ரம தீரன். (சஉ)

சாப்பு.

நந்தநந்தன் மாயன்கூர்மன் பரசிராமனே
நாரசிங்கன் குண்டலன் பலபத்ர ராமனே. (சங)

ஆதி.

நரவணு பூரண நாரணனே
கரவணு தாரண காரணனே. (சச)

ஆதி.

நாரண காரண பூரணனே
ஆரணபாரணதோர்ணனே. (சரு)

சாப்பு.

நீலமேகக் கோலங்கொண்டுயிர் நிகழுக்கங்கணம் பூண்டவா
மூலமேயென்றேலஞ்செய்கரிமுன்வந்திடர்தொலைத்தாண்டவா.

சாப்பு.

பாரோங்கும் பெண்ணைத்தென் பாற்றிருக் கோவலூர்
ஏரோங்கும் பண்ணைக்கொண்டேற்றிருக் கோவலூர். (சஎ)

ஆதி.

பிரமன் றுதை பஞ்சாயுதனே
பின்னைகேள்வன்சக்ராயுதனே. (சஅ)

ஆதி.

பீதாம்பரன் சலபுரதர சீலன்
பிரமாணன்பெருமான்கோபாலன். (சகூ)

ஆதி.

பூமிகொழுனன் பிறப்பிலி யாதவனே
புருஷோத்தமன்புகழ் சலியாதவனே. (ருo)

சாப்பு.

மச்ச கூர்ம வராக நரசிம்ம வாமன மருவு மூவிதராம கோவிந்தா
அச்சுதாநந்த கோபால ஜனார்த்தன வட்டாக்கர நேத்ர வரவிந்தா.

சாப்பு.

மணிவண்ணகண்ணன்மகத்தவனே
மதிநல வண்ண மிகுத் தவனே. (௫௨)

ஆதி.

மாயா தீதன் மாயவனே
மாயா வுதியா தாயவனே. (௫௩)

சாப்பு.

மாலண்டாப் பரசிவன் மைத்துனனே
மேலண்டாக் கரிசற வைத்தனனே. (௫௪)

ஜம்பை.

முண்டகாசனைகேள்வன் முழுதுணர்ந்தவனே
முருக னம்மா னமுதகட லமர்ந்தவனே. (௫௫)

ஆதி.

முருகனைப் பெற்றவள் முன்னோனே
கருவினைச் செற்றவர் தன்னோனே. (௫௬)

சாப்பு.

மூடமதே பஜ கோவிந்த மன்பாய்
பாடமதேநமக் கோர் துணையென்பாய். (௫௭)

ஆதி.

வரதராஜப்பெருமாள் திருவடியே
நரர்சுரர்முனிவர்க ளணிமுடியே. (௫௮)

ஆதி.

வரதராஜப்பெருமாள் தோத்திரமே
வாதனையற்றோர்பெறுஞ்சாத்திரமே. (௫௯)

ஆதி.

வரதராஜர்சந்நிதி கண்டவரே
பரதவியாவுளங்கொண்டவரே. (௬0)

சாப்பு.

வலவன் விபு விண்டு ஸ்ரீவைகுந்த நாதன்
வாசுதேவன் முகுந்த னரவிந்த பாதன். (௬௧)

சாப்பு.

வல்லா ரெல்லாருந் தொழும்பெருந் தேவி
மணாள னென்னையென்றுங் காப்போனே
சொல்லா நெறியையோர் சொல்லால் விளக்கிச்
சொரூப நிலையினிற் சேர்ப்போனே. (௬௨)

சாப்பு.

வள்ளற்பாக்கம் வாழ்ந்திடும்ஸ்ரீ வரதராஜரோ
கள்ளமில்லா ருண்ணிறைந்த கரியதேஜரோ. (௬௩)

ஆதி.

வாமன ஹரிமது சூதனனே
வனமாலி யுவண கேதனனே. (௬௪)

இலக்குமி.

இ - மனோகரம் தா - சாப்பு.

அறிதுயி லமர்ந்தமுர ஹரிமருவு பாவாய்
அடியரிட மகலாத வரியவர மீவாய். (௧)

சாப்பு.

ஆராம மனைபூமி தனதான்ய சந்தான
வங்கஞ பசுரூப வர்த்தனியே
தாராள மனமேவு குணசாந்த ரெஞ்சாத
சம்ப்ர மாதியதான வர்த்தனியே. (௨)

ரூபகம்.

அகிலவுயிர்கள் வறுமையிருளை யகற்றிடமன்னுங் கதிரே
அரியநினது கருணைசிறிது மடையாதவர்க்கென் சதுரே. (௩)

ரூபகம்.

அகிலதேவர் வடிவமமரு மாளிகைகளைக் கொண்டருந்திடும்
அரசர்வாழ்வு முழுவதுங்கெட வருள்தந்திடுவாய் கமலையே
அரியவுன்ற னருளையடையு மன்பர் தமக்குத் தொண்டுபுரியும்
அவர்கள்சேவை யநுதினம்பெற வரசிதருவாய் விமலையே. (௪)

ஆதி.

அவுணர் கொடுமையுலைத் தருள்செய் தாயே
அடிமை வறுமையொழித் தருள் செய்தாயே. (௫)

சாப்பு.

இருஷி கேசவனுளத் தமர்கின்ற பாவாய்
ஏற்பவர்க் கில்லை யென்னாதவர மீவாய். (௬)

ரூபகம்.

இலக்குமியே நினக்கிரக்க மில்லவர்பா னேசமோ
இலக்கணமேயெனத்தெரிக்கிலென்னநின்பான்மோசமோ. (௭)

சாப்பு.

உரகர்முத லும்பர்பணி யுரியமணி யிழையே
உனதருள் பெறுருலகி லுறுதனனி பிழையே. (௮)

ஜம்பை.

உலக ரக்ஷகியுன்ற னருளடைந் தவர்கட்
குலோபமத குணமாதி சதமாகுமோ
உரியபொருட் செல்விபூ தேவி ஸ்ரீதேவியுன
தொருபெருங் கருணைசேர்க் கிதமாகுமோ. (௯)

ரூபகம்.

உனதருட் பொருளுடையவர் பரமுடையார்
உலகினைச் சதமுடையவ ரிகமிடையார். (௧0)

ரூபகம்.

கருணையிலா மாக்கள்வாழ்தல் கலிசுபாவமோ
கரியமால் தேவியுன்ற னருட்பிரபாவமோ. (௧௧)

சாப்பு.

கார்வண்ண னுலகெலாங் காக்கவருள் சீதா
கடியபுலை கொலையிலார் கருத்தில்வளர் மாதா. (௧௨)

சாப்பு.

கொல்லா புரத்திலமர் குமுத மாமதியே
கொல்லா தவர்க்கருள்செய் குறைவிலா நிதியே. (௧௩)

ஜம்பை.

சிட்டர்மகிழ் நினைப்பூசை செய்கிறே னன்னையே
சித்தமொரு வழியாகத் தெரித்திடாய் பின்னையே. (௧௪)

சாப்பு.

சித்திபுரத் தமர்கின்ற சீதேவியே
புத்திநிலைத் திடவருளும் பூதேவியே. (௧௫)

சாப்பு.

சீதேவி நளினி யிந்திரை பின்னை திருவே
செல்வி பொன் கோகனகை மாகனக வுருவே. (௧௬)

ஆதி.

ஸ்ரீபெருந் தேவியின் றிருவடியே
தேவர் முனிவரரும் பெறுமுடியே. (௧௭)

ஆதி.

ஸ்ரீபெருந் தேவியைக் கண்டவரோ
திருவரங் கினிற்குடி கொண்டவரோ. (௧௮)

ஆதி.

ஜீவ தயாபரி நினதருளே
சேரலிலார்க்கிலையுறுபொருளே. (௧௯)

சாப்பு.

செங்கமலை வெண்கமலை சேர்ந்தநடு நாடு
சித்திபுர முற்றவர்கள் பெற்றியரு ளீடு. (உ0)

ஆதி.

செய்யா ளரிப்பிரியை யிலக்குமி யிளையாள்
திருமகள் பொருட்செல்வி யருடர விளையாள். (உக)

சாப்பு.

திருக்கண்ண மங்கைவளர் ஸ்ரீதேவியே
திருக்கெண்ண நீங்கவருள் மாதேவியே. (உஉ)

சாப்பு.

திருமடந்தை யுலகளிக்குஞ் செல்வியெழிற் குயிலே
செழுங்கமலப் பொகுட்டிலரி சிருக்குமொரு மயிலே. (உங)

சாப்பு.

திருவரத ராஜர்மகிழ் ஸ்ரீபெருந் தேவி
இருவினையுமொருமையுறவினிதருள் சஞ்சீவி. (உச)

ஜம்பை.

நிகிலஜக ரக்ஷகன் மார்பமர் கமலையே
நினதருளை யின்றிநின் கணவர்தொழிலிலையே. (உரு)

சாப்பு.

பசுங்கழைவில் வேனிலான் றனையீன்ற விந்தாய்
பதம்புகழு மன்பர்பவ வினைதீர்க்கு மெந்தாய். (உசு)

ஜம்பை.

பசுவதைத் திடுவர்பிணி பசியொடலை யாரோ
பதுமையுத் தமமுடையர் பரவிநிலை யாரோ. (உஎ)

ஆதி.

பவவினை தடுப்பதுன் னருட்பொருளே
பலவுடல் கொடுப்பது மருட்பொருளே. (உஅ)

சாப்பு.

பாற்கடலுதித்த பார்க்கவி யமலையே
பதுமைபொறி முண்டகாசனை விமலையே. (உக)

சாப்பு.

புகலரிய புகழுடைய புவிவளர் பிராட்டீ
பொன்றலறு பொருளுதவு புனித பெருமாட்டீ. (௩0)

ஆதி.

புலவர் மனமகிழப் பொருடருவாயே
புவியி லெவர்க்குமரு டரவெருவாயே. (௩௧)

சாப்பு.

மருவளர் கைலாச மகதேவ னருள்சுப்ர
மண்யருக் கன்புள்ள மாமியம்மையே
கருவிலு மெமைக்காக்குங் காவல னுளமகிழ்
கருணை செய்யும்பெருந் தேவியம்மையே. (௩௨)

இரவி.

இ - காம்போதி - தா - ஆதி.

அண்டயோனி விஜய மார்ந்தவனே
அருக்கன்மாழை யிரத மூர்ந்தவனே. (௧)

சாப்பு.

அயமா வெயிற் கிரண மாலியினனே
அருண மார்த்தாண்ட விருள்வலி தபனனே. (௨)

ஆதி.

அலரி யாயிரஞ்சோதி யழலவனே
அனலி ஞாயிறு பானு கதிரவனே. (௩)

சாப்பு.

ஆதவன் மித்ரன் செங்கதிரோனே
ஆதித்தன் பற்கன் செஞ்சுடரோனே. (௪

ஆதி.

உலக விருளகற்று மொளி நிலையே
உனைவணங்குவர்க்கென்றுங்குறைவிலையே. (௫)

ஆதி.

எல்லை பங்கய னேழ்பரியோனே
என்றரி யென்றா ழொளியோனே. (௬)

ஆதி.

சண்டன் சவிதா தினமணியே
சான்றோன் கனலி நபோமணியே. (௭)

ஆதி.

சித்திரபானுவைச் சேவை செய்வோமே
சிதையாத தேகம்பெற் றுய்வோமே. (௮)

ஆதி.

சோதி யுதய னொளி சூரியனே
சூரன் பகலுலக காரியனே. (௯)

ஆதி.

பகலோன் பனிப்பகை தினகரனே
பதங்க னெற்பரிதி திவாகரனே. (௧௦)

ஆதி.

விருச்சிக பாஸ்கர வியன்மணியே
வேண்டு மெனக்கருள் வியன்மணியே. (௧௧)

ஆதி.

வெய்யோ னிரவி விகர்த்தனனே
விண்மணி தரணி விரோசனனே. (௧௨)

பொது.

ஆதி.

அகணித மந்திர வாண்டவனே
அதுலித வம்பர தாண்டவனே. (க)

ரூபகம்.

அகர வுகர மகர ப்ரணவ சிகர கர்த்தனே
அகில மறியு மடியரிதய தகர நிர்த்தனே. (உ)

சாப்பு.

அண்டாண்ட பிண்ட வகிலாண்ட பகிரண்ட
வனந்தகோடி சகத்காரணா
பிண்டாண்ட வண்ட பிரமாண்ட சருவாண்டம்
பிறங்குதேக மகத்பூரணா. (ங)

சாப்பு.

அந்தரங்க வனந்தமூர்த்தம தானவாதி யனாதியே
அந்திவண்ண சுயம்பிரகாச சமானபோத விபூதியே. (ச)

ஆதி.

அத்துவிதச் சிவமே - பர - தத்துவ தற்பவமே
நித்திய தத்துவமே - யுயர் - சத்திய சித்துவமே. (ரு)

ஜம்பை.

அம்பராம் பர வபரிமித வகோசரனே
அம்பலம் பரவு பரபத சராசரனே. (சா)

ஆதி.

அயனரி யரன்றுதி நடத்தோனே
அவரவர் மதம்புக விடத்தோனே. (எ)

ஆதி.

அரனரி ஞானயோக மானகலமே
அறிஞர்கள் சேருநீத மோனபலமே. (அ)

சாப்பு.

அறுகோடி சமயத்து ளானவனே
அவையவை யறியாத தானவனே. (௯)

ஆதி.

அற்புத சிற்கனமே - சுக - தற்பர விற்பனமே
சற்குண தத்துவமே - பர - சிற்குண சத்துவமே. (௧0)

ஆதி.

அற்புத சின்மய வந்தரனே
தற்பர தன்மய தந்திரனே. (௧௧)

ஆதி.

அற்புத விமல வரோதயனே
அக்ஷய வசல மகோதயனே. (௧௨)

சாப்பு.

அற்புத விராட்டுருவ வமலநாதா
விற்பன விநோதசுக விமலபோதா. (௧௩)

சாப்பு.

ஆனந்த நாடகனே - பர - மானந்த வீடகனே
மோனந்தவாதவனே - யருள் - வானென் றுமாதவனே. (௧௪)

சாப்பு.

இருமூன்று முறைகொண்ட பொருள்கண்டு போற்றவரு
ளின்ப சிதம்பர நாயகனே
வருமூன்று மிகைவிண்டு துறைகண்டு ளேத்தவருள்
மங்கை யிடம்பெறு தாயகனே. (௧௫)

சாப்பு.

இறங்கி யிறங்கா திருக்கும் ஞானநடம்
இயற்றிடுஞ் சிவராமமே
உறங்கி யுறங்கா திருக்கும் யோகநிலை
யுஞற்று மரிசிவ நாமமே, (௧௬)

ஆதி.

உத்தரஞான சிதம்பர தேவா
உத்தரஞான நலந்தர வாவா. (கஎ)

ஆதி.

உத்தர ஞான சிதம்பர நாதா
உற்பவ நோயை யொழித்தரு ணீதா. (கஅ)

சாப்பு.

உத்தர நேர் திசை யோனுதி யாதரு ளுத்தரஞான சிதம்பரனே
சத்துவ வாழ்வினர் தானுறு மேதகு சத்தியஞான பரம்பரனே. (கசு)

சாப்பு.

உபசாந்த வூர்த்த தாண்டவ நிரதிசயனே
ஓங்கார வுருவ சின்மய நிராமயனே. (உ0)

சாப்பு.

உற்றவர்க ளெல்லாரு மொத்துவாழ்ந் திடல்வேண்டும்
உத்தரஞான சிதம்பரனே
கற்றவர்கள் கல்லாருங் கண்டுகளி மண்டுமியற்
காரணஞான பரம்பரனே. (உக)

சாப்பு.

உற்றவென் குற்றங் குணமாகக் கொண்டருள்
உத்தரஞான சிதம்பரனே
கற்றவர் முற்றுங் கதிநலங் காணற்குக்
கர்த்துருவான பரம்பரனே. (உஉ)

ரூபகம்.

எண்ணெணேழு கோடிசித்தி யியக்கு மெந்தையே
கண்ணிணேழு கோடிசத்தி கலந்த தந்தையே. (உரு)

சாப்பு.

எல்லவரு நல்லவர்க ளென்றுமன மெண்ணவருள்
இன்ப சிதம்பர நாடகனே
வெல்லவரு தொல்லைவினை விண்டவர்கள் கண்டுதொழும்
விந்து பரம்பர வீடகனே. (உச).

சாப்பு.

என்று மழியாதசுக நிலமூன்று மருள்புரிக
வின்ப சிதம்பர நாடகனே
துன்று மறைகோடி மயறனையூன்று பதநிழலுத்
துங்க விதந்தரு வீடகனே. (உரு)

ஆதி.

ஒன்றாய்ப் பலவாய் விரிந்தவனே
ஒன்று நிலையிற் றிரிந்தவனே. (உசா)

சாப்பு.

ஓடாத மாயையை நீடாத படிநல
மோவாது ஞற்றிட வருள்வோனே
வாடாத நீர்மையைக் கோடாத படியருள்
வாகா லரற்றிடத் தெருள்வானே. (உஎ)

ஆதி.

கடையேன் குற்றங்குணங்கொண்டவனே
கவலை விட்டிரு வென விண்டனே. (உஅ)

ரூபகம்.

கண்டமகண்ட மிரண்டுங் கடந்து கலந்த காக்ஷியே
அண்டமுகந்து திரண்டுங்கிடந்திங் கமர்ந்த சாக்ஷியே. (உகூ)

சாப்பு.

கருணாகர சங்கர நாரா யணனே
பொருணூலுறுபன்மறைபாராயணனே. (௩௦)

சாப்பு.

கற்பனாதீத கருணாம்பர வுலாசா
காலங்கடந்த கருணாகர விலாசா. (௩க)

ஆதி.

காரிய காரண வாதரனே
கருணாகர ஹார சீதரனே. (௩௨)

சாப்பு.

காலங் கடந்தவனே - சக - சாலங்க டந்தவனே
கோலஞ் சிறந்தவனே - யருட் - சீலஞ் சிறந்தவனே. (௩௩)

சாப்பு.

கைலாச வைகுந்த கதிவாச தேவா
கருணாகர வடியேன்றன் கண்காண வாவா. (௩௪)

ஆதி.

சங்கு சக்ராயுத சூலதரனே
புங்கவி யுமைதிரி சூலிவரனே. (௩௫)

ஆதி.

சச்சிதானந்த சலக்ஷணனே
சத்துவானந்த விலக்ஷணனே. (௩௬)

சாப்பு.

சத்துவ குணத்தர்நிறை சித்திபுரநாதா
செத்தவ ரிகத்தில்வர சித்திபுரிநீதா. (௩௭)

ஆதி.

சம்பு சாக்ஷாத்கார சர்வமூர்த்தனே
சம்ப வாதீதாக்ர சர்வதீர்த்தனே. (௩௮)

சாப்பு.

சர்வ சம்பிரம சத்தியோஜாதனே
சர்வ மங்கள சம்பவாதீதனே. (௩௯)

சாப்பு.

சித்தி நிலைக்கரசே - பர - முத்தி நிலைக்கரசே
பத்தி நிலைக்கரசே - யியற் - புத்தி நெறிக்கரசே. (௪0)

சாப்பு.

சித்தெலாம் வல்ல சிற்சபை நாதனே
சிற்பரா நந்த தத்துவ போதனே. (௪௧)

ஆதி.

சிற்பர தத்துவ சின்மயனே
தற்பர சத்துவ தன்மயனே. (சஉ)

ரூபகம்.

சுத்தசத்த வத்தனே துற்றமற்ற முத்தனே
மத்தமுற்ற நித்தனே மத்திநத்து மத்தனே. (சந)

ரூபகம்.

சுத்தமனத்தைச் சத்தியாக்கித் தொழும்பு கொண்டவா
சித்தரினத்தை யொத்ததாக்கிச் செழும்பு கண்டவா. (சச)

ஆதி.

தத்துவ த்ரயங்கடந்த தம்பிரானே
அத்விதத் திரம்புரிந்த வெம்பிரானே. (சரு)

ஆதி.

தத்துவ மோன தயாநிதியே
சத்திய ஞான சபாபதியே. (சசு)

ஜம்பை.

தற்பத சதாநந்த சர்வசத்தி தரனே
தத்துவ நிராலம்ப சர்வசித்தி புரனே. (சஎ)

சாப்பு.

தன்னிக ரிலாத வானந்த நடனு
தற்புருட வேத வேதாந்த படனு. (சஅ)

ஆதி.

தாமோதர சிவ சங்கரனே
தாமோதர பவ சங்கரனே. (சகூ)

ஆதி.

திருவயிந்திர புர தேவ நாதனே
திரிமூர்த்திசொரூப மானநீதனே. (ரு௦)

சாப்பு.

துரியா தீதத் தப்பாலவனே
தெரியாதுதெரிகின்றமேலவனே. (ருக)

சாப்பு.

தேவர்க ணாயகமே - ஜக - ஜீவர்க ணாயகமே
மூவர்க ணாயகமே - யரு - ளோவறு நாயகமே. (ருஉ)

சாப்பு.

நாதமுடி முடியின்மிசை மேவுபரம் பரவமல
நாதநிரந்தர வெளியானே
நாயடிமை சிறுபுன்கவி மாலைபுனைந் தருள்புரியு
ஞானசிதம்பர வொளியானே. (ருங)

ஆதி.

நாராயண சிவ சங்கரனே
நாராயண பவ சங்கரனே. (ருச)

சாப்பு.

நான்செய்தேன் பிறர்செய்தா ரெனும்பேத நீங்கிட
ஞான சிதம்பர வருள்வாயே
ஊன்செய்தே யுறுமென்ற வினையோதி மேம்பட
வோதி தரும்பரம் பொருணீயே. (ருரு)

ஆதி.

நிலன்முதல் விசும்புமாய் நின்றோனே
புலன்பொறி யுணர்விலா மன்றோனே. (ருசு)

ஆதி.

நிலன்விசும் பிடையுரு வருவோனே
மலமறு மலர்மிசை வருவோனே. (ருஎ)

சாப்பு.

நிர்சல நிராதார நிரவயவ தேஜா
நிஷ்கள நவாதீத நிமல நடராஜா. (ருஅ).

ஆதி.

பத்திகொள்யோகருணா துதியே
பக்குவ கால முறுகதியே. (௫௯)

ஆதி.

பரசிவ சிற்பர பரஹிதனே
பரசுக சிற்பத பரிகதனே. (௬௰)

ஜம்பை.

பாதுரிய பவவிமோசன பரம்பரனே
பரவெளியி லொளிபரோதய பராபரனே. (௬௧)

ஜம்பை.

பரநாத வேதன வமல பகாதீதா
பசுபாச பாவன நிமல சுகாதீதா. (௬௨)

சாப்பு.

பரபரிண பராந்த பரிமிதாதீதா
பரமபோத வகண்ட பாவனாதீதா. (௬௩)

சாப்பு.

பரமசாந்த மகத்வ பரம நிருத்தனனே
பரமமோக்ஷ பதித்வ பரம சமர்த்தனனே. (௬௪)

சாப்பு.

பரமசேதன பஞ்சகிர்த்திய பரமசத்துவனே
பரபுராதன பதிதபாவன பரமதத்துவனே. (௬௫)

சாப்பு.

பரமானுபவ பரம மூத்தாந்தநாதா
பரமானுகுண பரம் சித்தாந்தபோதா. (௬௬)

ரூபகம்.

பரமேசுவர பரமார்ப்புத பரமபோகனே
பரமார்த்தன பரிவேத்திய பரமயோகனே. (௬௭)

திரிபுடை.

பரிபூரண தயாகர பவநாசா
பரகாரண வியாபக பரமேசா. (சுஅ)

சாப்பு.

பல்லாயிர நாமம் பதித் தவனே
கொல்லாதவர்க்கின்பம்விதித்தவனே. (சுசு)

ஆதி.

மலைகடல் மலர்மிசை வாழு மொருவானே
மயர்வறு நலமதி சூழ வெருவானே. (எ0)

ஆதி.

மெய்த்தவர் பாவனைக் கெட்டானே
விளம்பு மக்கரமிரண் டெட்டானே. (எக)

ஆதி.

வாமன கேசவ ஹரிஹரனே
சோம சுகாதித பரிபுரனே. (எஉ)

சாப்பு.

விகாசன விசித்திர விநோத சிற்குணனே
விகோடண விலக்கண விசேட நிர்க்குணனே. (எங)

ரூபகம்.

வெளியுள்வெளியாய்வெளிமேல்வெளியாய்விளங்குங்காரண
ஒளியுள் ளொளியா யொளிசூ ழொளியா யுளங்கொள் பூரண. (எச)

சாப்பு.

வேதாந்த வேத வேத்திய விமலனே
வேதாண்ட விசுவ வியாபக விபுலனே. (எரு)

சாப்பு.

கணபதி சரவணன் கார்வண்ண னயனரன்
காரண னீசன்முச் சுடராதியே
கருதுறு மிவர்சத்தித் தொகைவகை பேதமுங்
காரிய மாய்த்தோற்று மொருநீதியே. (எசு)

ஆதி.

சிதம்பர முந்திரு வரங்கமே
பதம்பெறுவர்க்கிதுவொரங்கமே. (எஎ)

ஆதி.

பரமபதம் பொன் னம்பலமே
இரமதறிந் தவர்தம் பலமே. (எஅ)

சாப்பு.

நீதிமன்றந் திருவரங்கம் நிர்விகாரமே
ஆதிபகவ னரியுமென்ப ரருளகாரமே. (எகூ)

ஆதி.

எவனவ னுயர்கல வாரணனே
அவனய னரியரன் காரணனே. (அ0)

ஆதி.

எவன்மதி நலமருள் வானவனே
அவன்பதி யடைவன் மீதானவனே. (அக)

ஆதி.

எவனுயர் வுயர்வற விளைந்தவனே
அவனிரு பகையறக் களைந்தவனே. (அஉ)

ஆதி.

மயர்வறு மாலயன் மாவரனே
மனமலை வறுநிலை சேர்வரனே. (அங)

ஆதி.

மாலய னரர்க்கிறை மேலவனே
மாலயர் வறவருள் மூலவனே. (அச)

ஆதி.

அமரர்கள் துயரறு சுடரடியே
அயனரியரன்சொலுந் திடமுடியே. (அரு)

சாப்பு.

திருவளர் மார்பன் தேஜோமயனே
திகழ்பர மேசன் சதோதயனே. (அசு)

சாப்பு.

உமைபாக னிலக்குமி நாயகனே
உயர்ஞானவிலக்கண தாயகனே. (அஎ)

சாப்பு.

கரியமாற் கரியவன் காரணனே
உரிய தேஜோமய ஞரணனே. (அஅ)

சாப்பு.

காயாம் பூவண்ணன் காரணனே
காலா காலன் சம்பூரணனே. (அகூ)

ஆதி.

ஒன்றே பலவா யானதுவே
நன்றே யறிவார் வானதுவே. (கூ0)

சாப்பு.

நீலமேகன் சோதிநாத னெனுமிறையே
காலகாலன் தேவநாத னெனுமறையே. (கூக)

சாப்பு.

ஒளியிலொளியு மொளியில்வெளியு முடைய தன்மையே
உருவிலுருவு முருவிலருவு முரிய நன்மையே. (கூஉ)

சாப்பு

வெண்மைசெம்மை யொன்றென்றுன்னும் வீததிரமே
வெண்மைதன்னி லேந்துண்டென்னும் வேதபரமே. (கூ௩)

சாப்பு.

வெண்மை செம்மை வண்ணந்தோற்றும் வேதமொன்றிலே
வேத வுண்மை யாய்ந் தறிந்தோர் நீதமன்றிலே. (கூச)

ஆதி.

அரியரன் சத்திசத்த ஞானவனே
அறிவறி நித்தமுத்த வானவனே. (கூரு)

சாப்பு.

ஆணும் பெண்ணு மலியுமாகா வாதிசத்தியே
அயனு மாலு மரனுமேகா நீதி முத்தியே. (கூசு)

ஆதி.

பொதுவினி லுறைபவன் பூரணனே
பொதுசிறப் புரியவன் காரணனே. (கூஎ)

ஆதி.

தீன தயாபரன் றிருவடியே
திரிமூர்த்திகள் சிரம்'பெறுமுடியே. (கூஅ)

சாப்பு.

கொலைபுலை யொழித்தோர் குறையதனைத் தீர்ப்பார்
கலைநிலை பழித்தோர் கவலையுறப் பார்ப்பார். (கூகூ)

சாப்பு.

நானகப் பட்டே னவர்புறப் பட்டார்
நான்புறப் பட்டே னவரகப் பட்டார். (க00)

ஆதி.

அவரவர் பாவனை வந்தவரே
தவநிலை சேர்நெறி தந்தவரே. (க0க)

சாப்பு.

பாவனை யிற்பேத மாய்விடுமே
பாவனு தீதத்திற் போய்விடுமே. (க0உ)

சாப்பு.

பாவ பாவாதீத மியனிசமே
ஜீவ வீசாயேதங் குருவசமே. (க0ங)

ஆதி.

காரியத்திற் பேதம னேகவிதமே
காரணத்திற் போதம தேகவிதமே. (௧0௪)

திரிபுடை.

காரிய காரணாதீதம் பர வசமே
சாரிய விலக்கணங்க ளியல்வசமே. (௧0௫)

ஆதி.

நாத விந்து கலாதீதம்
சீத சந்திர சுகாதீதம். (௧0௬)

சாப்பு.

அறிவா ரறிகின்ற வண்ணங்க ளெல்லாம்
ஆகி யிலங்குவ தொன்றே
செறிவா லறிந்து பிறியா திருந்து
சித்திக ளூற்றிட னன்றே. (௧0௭)

சாப்பு.

மறை துதிக்கும் பதன் மாதேவ நாதன்
மறையு மறியாப் பதன் மறைஞான போதன். (௧0௮)

சாப்பு.

அன்ப ருள்ளந் திருவரங்கா யமரும் பரசிவ ராமமே
ஆதி யந்த நடுவிலாத வரிய ஹரிசிவ நாமமே. (௧0௯)

சாப்பு.

சிதம்பரத்தே மோன ஞானந் திகழும் பரசிவ ராமமே
பதம்பெறச் சீரோங்கும்யோகம் பரவும்ஹரிசிவநாமமே. (௧௧0)

சாப்பு.

நவநிலந்தரு நயநடம்பெறு நகபதஞ்செறி நடுநிறைந்தியல்
திவநிறைந்திடு திருநலத்திகழ் சிவசிதம்பர சிவசிதம்பர.. (௧௧௧)

சாப்பு.

தத்துவமோன நிறைந்திடுஞ் சத்துவஞான விதம்பெறுஞ்
சத்தியஞான பதந்தருஞ் சத்தியஞான நடந்திகழ்
உத்தமகான நிதந்தொனி யுத்தமயோக ருறைந்திடும்
உத்தரஞான சிதம்பர உத்தரஞான சிதம்பர. (௧௧௨)

சாப்பு.

பவசங்கட மறநெஞ்சுறு பரமந்திர மெனவிஞ்சுவ
சிவசங்கர சிவசங்கர சிவசங்கர சிவசங்கர. (௧௧௩)

ரூபகம்.

மந்தணபர ரஞ்சிதசுக மங்களகர விங்கிதருண
வங்கணநய குஞ்சிதபத வங்கிதநிலை தங்குறுகல
சந்ததமறை யந்தணர்நினை சந்தசுநிறை மந்திரநிலை
சங்கரசிவ சங்கரசிவ சங்கரசிவ சங்கரசிவ. (௧௧௪)

ஆதி.

அருணல முடையது அருணட மிடுவது
அருணிலை பருள்வது அருநெறி தருவது
அருளுற முயல்பவ ருநுதின நினைவது
ஹரஹர ஹரஹர ஹரஹர ஹரஹர. (௧௧௫)

ஆதி.

தெருள்வடி வுடையது தெருநெறி தருவது
தெருணிலை செறிவது தெருணல முறுவது
தெருள்வடி வடைபவர் தினமன நினைவது
சிவசிவ சிவசிவ சிவசிவ சிவசிவ. (௧௧௬)

சாப்பு.

தொண்டர்கள் பத்தர்கள் முத்தர்கள் சித்தர்கள்
சூழ்வது நால்வகை மந்திரமே
அண்டருங் காணற் கருந்தவ மில்லையேல்
அண்டுவ தின்றெனல் தந்திரமே. (௧௧௭)

சாப்பு.

மதநோக்கம் பற்றாத மதிகூட்டும் பாங்காக
மடலோங்கும் பார்வதிபுரமே
மடமாற்றுந் தட்டாத மலமோட்டு நீங்காத
வுடலோங்கும் பார்வதிபுரமே. (கக௮)

சாப்பு.

எட்டுக்கொண் டார்தமைத் தொட்டுக்கொண் டெய்வதற்
கியலிடம் ஞான சிதம்பரமே
கட்டுக்கொண் டார்மலப் பற்றுக்கின் றெய்வுறக்
கனிவுசெய் மோன பதந்தருமே. (ககசு)

சாப்பு.

உலகெலாம் அருட்பெருஞ் ஜோதியென் றேத்திடும்
உத்தரஞான சிதம்பரமே
ஒருதெய்வ மேயென் றுலகி லெவருக்கும்
ஒப்பத் தெரிவிக்கு மம்பரமே. (க௨0)

சாப்பு.

சத்திகள் சத்தர்கள் கர்த்தர்கள் பணிவுற்ற
உத்தர ஞான சிதம்பரமே
தத்துவ தாத்வீக வுற்பவ நிலைமுற்றும்
இத்தகை யென்றரு ளம்பரமே. (க௨க)

சாப்பு.

சித்தரு முத்தரும் பத்தரு முற்றிடும் உத்தரஞான சிதம்பரமே
செத்தவர் மீள்வு மித்தரா தன்னிலு தித்திடச் செய்வது வுத்திரமே.

சாப்பு.

ஒன்றுமறு கோடிசம யங்கடொழு திடநின்ற
உத்தரஞான சிதம்பரமே
ஒன்றலவி ரண்டுமல வொன்றிரண் டலவென்னும்
உத்தமஞானந் தருந்திரமே. (க௨௩)

சாப்பு.

ஒத்தவறு சுத்தநிலை முடிநடுவின் முடிவிலமர்
உத்தரஞான சிதம்பரமே
உற்றதை மறைக்குமெழு திரைகண்முழு வதுநீக்கும்
உண்மை தெரிவித்த லுந்திரமே. (கஉச)

சாப்பு.

சுத்தவெளி நட்டநடு நித்தவொளி யுற்றிடுவ
துத்தரஞான சிதம்பரமே
முத்திவழி சித்திபெற வத்துநிலை யத்துவித
முற்றியமோன பரம்பரமே. (கஉரு)

சாப்பு.

உலகநிலை யாவுமா யலவாகி யொளிர்கின்ற
துத்தரஞான சிதம்பரமே
உவமையுயர் வில்லாத வருளலதொன் றிலையென்னும்
உத்தரஞானந் தருந்திரமே. (கஉசு)

சாப்பு.

உரைமனங் கடந்துநின்ற வொருநிலை விளங்குகின்ற
துத்தரஞான சிதம்பரமே
உயிரெனுஞ் சிறந்தமன்ற நிலையென விலங்குமென்ற
உத்தரஞானந் தருந்திரமே. (கஉஎ)

சாப்பு.

உனதவடிமுதலுபய நிலைவெளிக ளொன்றென்னும்
உத்தரஞான சிதம்பரமே
உடலுயிரின் வகையொளியின் வகைபல தெரிந்தின்பம்
உற்றிடுமோனந் தரும்பரமே. (கஉஅ)

சாப்பு.

உருவமதி லருவமரு வதிலுருவு முறவைத்த
துத்தரஞான சிதம்பரமே
ஒருவெளியி லகிலவல கவைநிறுவு பெருசித்தி
உண்மையறிவிப்பு துந்திரமே. (கஉகூ)

சாப்பு.

உருவவுரு வருவவரு வோபசனேக்குற்ற
துத்தரஞான சிதம்பரமே
உயிர்களரு ளொளியினதி லேசமென் றறிகின்ற
உண்மைவிளக்குவ தந்திரமே. (௧௩௦)

சாப்பு.

உரியவறி வாறுமுட லேழும்வினே வழியருள்வ
துத்தரஞான சிதம்பரமே
உரையுமறை யாகமபு ராணவிதி ஹாசநிலே
உள்ளதறிவிக்கு மம்பரமே. (௧௩௧)

சாப்பு.

உத்தி சுருதி யநுபவ மொத்துள துத்தரஞான சிதம்பரமே
சத்திய சிற்சபையொத்துளவுத்தர தத்துவஞான சிதம்பரமே. (௧௩௨)

சாப்பு.

ஒத்ததலம்பெற வுததியை நத்துவ துத்தரஞான சிதம்பரமே
சத்துவ சுத்த சதோதய மங்கள தத்துவஞான சிதம்பரமே.

சாப்பு.

உன்னலுறு முன்னிலே யொழித்தக முகந்தருவ
துத்தரஞான சிதம்பரமே
பின்னமொ டபின்னமு மறத்துரிய மீதிலகு
பெற்றியடைகுவ தந்திரமே. (௧௩௩)

சாப்பு.

சுத்தமுறு மோனநிலே முற்றுமெளி திற்றருவ
துத்தரஞான சிதம்பரமே
எத்தரையு ளோருமொரு மித்துசுக முற்றிடமெ
கத்துவசிருந் தருந்திரமே. (௧௩௫)

சாப்பு.

அத்துவித சித்திநெறி யிற்றெனத் தெரிவிப்ப
துத்தரஞான சிதம்பரமே
தத்துவம தற்றவொரு சுத்தசத் துவநித்த
வித்தகஞானந் தருந்திரமே. (௧௩௬)

சாப்பு.

ஒளிதோன்ற வெளியாகு முனதுளே பரவொன்ற
துத்தரஞான சிதம்பரமே
உளாமூன்று முனமேகுந் திளாபோகுந் தேரென்னும்
உத்தமபோதந் தருந்திரமே. (௧௩௭)

சாப்பு.

பித்தபால வுன்மத்த நிலைதரும் உத்தரஞான சிதம்பரமே
சித்த ஜால கன்மத்தன வையொழி வித்திடுநேயந் தருந்திரமே.

சாப்பு.

உள்ளதேயுள்ளதென் றுண்மை யுளாதரும்
உத்தரஞான சிதம்பரமே
துள்ளனீத் துன்னிடந் தொன்மைநிலைதரு
சுத்தமெய்ம்மோன பரம்பரமே. (௧௩௯)

சாப்பு.

உண்மை யுணர்வினி லுண்மை யநுபவம் உத்தரஞான சிதம்பரமே
கண்மை நிறைதவர் கண்டு கதியுறக் காட்டியசாதன முந்திரமே.

சாப்பு.

முத்தி பத்தியினுற் சித்தியுற் றிடுமென்ப
துத்தரஞான சிதம்பரமே
பத்தி யற்றவர்சேர் பெற்றி பெத்தமதென்னுஞ்
சத்தியஞாயந் தருந்திரமே. (௧௪௧)

சாப்பு.

உலகிற்கொலை புலைபுரியுஞ் சமயமறச் செய்கின்ற
துத்தரஞான சிதம்பரமே
உரியசம ரசசுத்த சன்மார்க்க நன்னிலை
யுற்றிடச்செய்வது வுந்திரமே. (கசுஉ)

சாப்பு.

உலகிலரு ளரசாக்ஷி யோங்கச்செய் விக்கின்ற
துத்தரஞான சிதம்பரமே
உயிர்நிலையு மருணிலையு மொளிநிலையு மறிகின்ற
உத்தமஞானந் தருந்திரமே. (கசுரு)

சாப்பு.

உத்தர ஞான சித்தியு மருளு முத்தர ஞான சிதம்பரமே
உற்பவஞ்சாதல்முற்றுமொழித்தொருமுத்தியைநல்குவதுந்திரமே.

சாப்பு.

ஒற்றைக் கணத்தினின் முப்பத முந்தரும்
உத்தரஞான சிதம்பரமே
ஓட்டையும் பொன்னையு மொன்றாகக் காண்டலுக்
குற்றநலந்தரலுந்திரமே. (கசுரு)

சாப்பு.

உயிரெனக் கருணைகொண் டிதம்புரிகின் றவர்வாழ்வ
துத்தரஞான சிதம்பரமே
உரியவறு பத்துநான் கெழுகோடி சித்திகளும்
உத்தமர்க்கீவது வுந்திரமே. (கசுசு)

சாப்பு.

இத்தரையிற் சாகா வித்தையைக் கற்பிப்ப
துத்தரஞான சிதம்பரமே
சுத்தமா மாயை யொழித்தரு ளைப்பெறுஞ்
சத்துவஞானந் தருந்திரமே.. கசுஎ)

சாப்பு.

உபரச வேதியி னுபயமு மறிவிப்ப
துத்தரஞான சிதம்பரமே
உலகுறு சித்தெலா மொருநொடி யிற்செய்யும்
உளவு தெரித்தலு மம்பரமே. (கசஅ)

சாப்பு.

ஒருங்கே செம்பொன்னையும் வெண்பொன்னை யுஞ்செய்வ
துத்தரஞான சிதம்பரமே
வருங்கேத கேவல சகலந் தவிர்த்தின்ப
வாரிதி யாழ்த்துவ துந்திரமே. (கசகூ)

சாப்பு.

உருவி லழியா மூவகை யளிக்கும் உத்தரஞான சிதம்பரமே
உறவும் பகையு நன்மையுந் தீமையும் ஒத்தநெறியரு ளுந்திரமே.

சாப்பு.

ஓதா துணர்ந்திடு முளவை யுணர்த்துவ
துத்தரஞான சிதம்பரமே
ஓவா துணர்ந்திடு நிலையை யளிப்பதற்
குற்றதென்றோர்வது வுந்திரமே. (கருக)

சாப்பு.

உவமான முவமேயந் தானே தனக்காய
துத்தரஞான சிதம்பரமே
உயர்ந்தோரிழிந்தோரு மொன்றெனத் தோன்றற்
குளவறிவிப்பது வுந்திரமே. (கருஉ)

சாப்பு.

எத்தனைக் கற்பங்கண் முற்றினு மழியாத
துத்தரஞான சிதம்பரமே
அத்துவா வாறையு மிற்றெனத் தெரிகின்ற
தத்துவஞானந் தருந்திரமே. (கருங)

சாப்பு.

ஒத்து நினைத்தவை யத்தனை யுந்தரும்
உத்தரஞான சிதம்பரமே
சத்திநி பாதத் துத்தம ரோடுவாழ்
வித்தலைச் செய்வது வுந்திரமே. (கருச)

சாப்பு.

உற்றசமயத்தி லுற்ற நலந்தரும்
உத்தரஞான சிதம்பரமே
ஒத்த நிலையத்தை யற்றவ ரென்பெற
வுற்றனர்நீத பரம்பரமே. (கருரு)

சாப்பு.

உற்றது கற்றிட வுத்தமர் நத்துவ
துத்தரஞான சிதம்பரமே
உற்பவ மற்றிட நற்றவர் பற்றுவ
துத்தரஞான சிதம்பரமே. (கருசு)

ஜம்பை.

வடலூரென நவிலும்பார் வதிபுரஞ்சேர்வார்
வடலூசலென் றறையும்பார் வருபவந் தீர்வார். (கருஎ)

ஆதி.

பார்வதி புரத்தொரு பகலிருந் தவரே
பார்நிதி வெறுத்தவர் பகாருந் தவரே. (கருஅ)

சாப்பு.

உத்தரஞான சிதம்பரத் துற்றவர்
உற்பவநோயை யிடைந்தவரே
உத்தரஞான மனந்தற்குச் சொற்றிடும்
உத்தரஞான மடைந்தவரே. (கருகூ)

ரூபகம்.

அரிசிவ யோகஞானங் கொண்டவரே
பரமபத கைலாசங் கண்டவரே. (கசூ0)

ஆதி.

அன்பர்கள் சொற்பொருள் காண்பவரே
அரிசிவ யோகஞானம் பூண்பவரே. (கசுக)

ஆதி.

உடலுக்கோ ருயிரல திரண்டலவே
உளவறி யார்க்கிது தெளிவலவே. (கசுஉ)

ஆதி.

உயர்வுதொட் டெயர்வுமட் டோர்ந்தோரே
உண்மை யுணர்வுளின்பந் தேர்ந்தோரே. (கசுங)

ஆதி.

அரியுஞ் சிவனுமொன்றென் றோர்ந்தவரே
அரிய வுத்தர ஞானந் தேர்ந்தவரே. (கசுச)

சாப்பு.

காளகண்டன் கேசவன்றன் கருணைசால நேர்ந்தார்
காளஹஸ்தி நாதர்சதகங் கற்றநல்லோ ரோர்ந்தார். (கசுரு)

ஆதி.

எட்டைந் திரண்டிவிரண் டென்ற நாமமே
சுட்டென் றறிந்தவர்க ணவின்ற ராமமே. (கசுசு)

சாப்பு.

அன்னைதந்தை நமக்காரென் றுயாரே
அறியுமறிவி லுற்றபேத மோயாரே. (கசுஎ)

ஆதி.

அரியரன் சத்திசிவ மானவிதமே
அநுபவிக ளுணர்ந்த மோனபதமே. (கசுஅ)

சாப்பு.

அன்னைதந்தை யொருவரென்றோர் நல்லோரே
அரியசத்தி சிவமதென்பார் வல்லோரே. (கசுகூ)

ஆதி.

மூவர்க்குங்காரண னெனு மொழியே
மூதறி வோர்சொலும் பெருவழியே. (கஎ0)

ஆதி.

ப்ணிசய னரனென விதித்தவரே
பலகலை யுளவது தெரித்தவரே. (கஎக)

ஆதி.

தெய்வ மொன்றேயெனுந் திறந் தேர்வார்
திகழ்தேக முறுஞ்சித்தித் திடஞ்சேர்வார். (கஎஉ)

சாப்பு.

வைகுந்த கைலாச மொருவழியென் றுறுவார்
வான்புவியுங் காணாத பெரியகதி பெறுவார். (கஎங)

ஆதி.

ஹரிஹர சமரச மறிபவரே
ஆறந்த சமரச முறுபவரே. (கஎச)

ஆதி.

அகில மதிற்சகள வடிவி லுறாரென்
றறைந்திடுஞ் சிலர்தம் மதம் பொய்யே
அவரவர் பாவனைப் படிவரு வாரென்
றடியவர் பெறுஞ்சம் மதம் மெய்யே. (கஎரு)

ஆதி.

தனையறி யார்தந் தலைவனை யறியார்
தரமறியார் சிந்தனை வகை யறியார். (கஎசு)

ஆதி.

அதிநிலை நெறிவழி யொரு கதியே
பதிநிலை யறிபவர் பெரு நிதியே. (கஎஎ)

சாப்பு.

நித்தப் பரம மோனங் கற்றவரே
சுத்த ப்ரணவ ஞானம் பெற்றவரே. (கஎஅ)

ரூபகம்.

புருவ நடுவிற் பொருளை யறியும் புண்ய வான்களே
கருவையொருவுந்திருவையுறையுங்கண்யவான்களே. (கஎகூ)

ஆதி.

வடல்வித் தையினுண் மதியுற் றவரே
வழுவுற் றிடுமைம் மலமற் றவரே. (கஅ0)

ஆதி.

வடலினில் வேண்டிய வகை கற்றவரே
வடுவுறு போக்கொடு வரவற்றவரே. (கஅக)

ஆதி.

கல்வி கேள்வி வடலினிற் றெரிவார்
கருணை யோடியிருக் கிதம் புரிவார். (கஅஉ)

ஆதி.

வடலில் வசிப்பவ ரிடஞ் சேர்வோம்
மதிவிதி பற்றிய மயல் தீர்வோம். (கஅங)

ஆதி.

மதிபெரி தென்பர்தம் மலமறுவார்
விதிபெரி தென்பர்வெவ் வினையுறுவார். (கஅச)

சாப்பு.

மதிவழி விதியெனல் மாண்போதமே
விதிவழி மதியெனல் வீண்வாதமே. (கஅரு)

சாப்பு.

மதியே விதியெனல் மெய்ப்படுமே
விதியேமதியெனல்பொய்ப்படுமே. (கஅசூ)

சாப்பு.

மதியினல் வருவது விதி பலவே
விதியினல் வருவது மதி யலவே. (கஅஎ)

ஆதி.

மதிநல முடையவ ரிறப்பறுவார்
விதிபல முடையவர் பிறப்புறுவார். (கஅஅ)

ஆதி.

விதிப்படிச் செய்வர்மதி வழி விதியே
விலக்கினைச் செய்வர்விதி வழி மதியே. (கஅகூ)

ஆதி.

மெய்த்தவப்போலியர்க்குவிதிபலமே
மெய்த்தவச் சீலருக்கு மதிநலமே. (ககூ0)

ஆதி.

காமிய முறுவதுப சாதகமே
காமிய மறுகைசுப சாதகமே. (ககூக)

ஆதி.

ஔவைமொழிகொண்டவர்க்குமதிநலமே
அவ்வழி யகன்றவர்க்கு விதிபலமே. (ககூஉ)

ஆதி.

மனுமுறை கண்ட வாசகமே
மதிநலங் கொண்ட தேசகமே. (ககூங)

ஆதி.

உதார முடையவர்க்கு விதி யதமே
உலோப முடையவர்க்கு விதி சதமே. (ககூச)

ஆதி.

மயர்வற மதிநல மாழ்வாரே
மறலியின்விதிகெட வாழ்வாரே. (ககூரு)

ஆதி.

உருவ சொரூப சுபாவகமே
உணரார் பெறுவது பாவகமே. (ககூசா)

ஆதி.

வழிதுறை நிலைநெறி வகை யறியார்
பழியுறை பவநல மது பறியார். (ககஎ)

ஆதி.

ஆணவ வலிகொண் டறம் புரியார்
ஆவரணமெனுந் திரை பிரியார். (ககஅ)

சாப்பு.

பொருளுட னுலோபமுறு புருடரைச் சேரார்
புகழரிய நூல்தவிர புகல்வதைப் பாரார். (ககக)

ஆதி.

தாராள முற்றவர்க்குத் தரித்திர மில்லை
ஏராள முற்றநிதி யிசைவதேன் றூல்லை. (உ00)

ஆதி.

கொல்லா விரதம் பூண்டவரே
எல்லாருந் தொழு மாண்டவரே. (உ0க)

ஆதி.

சங்கராசாரிய ஜகத் குருவே
நங்களுளத்தமரு நலத்திருவே. (உ0உ)

ஆதி.

உத்தரகீதையை யோர்ந்தவரே
உத்தர ஞானந் தேர்ந்தவரே. (உ0ங)

சாப்பு.

மணிவண்ண கண்ணன்றிரு வாய்மலர் நிதியே
மதிநண்ணும்புண்ணியர்பெரு வாழ்வென மதியே. (உ0ச)

சாப்பு.

வியாச சிற்சித்தியை விரித்தவரே
தயாரச சற்பத்தி தரித்தவரே. (உ0ரு)

ஆதி.

வள்ளன் மரபே மாமரபு
மற்றுள வெல்லா மாவிரவு. (உ0சு)

சாப்பு.

அருட்பெருஞ் சித்தருண் முறையே
தெருட்பெருஞ் சித்தி தருமறையே. (உ0எ)

ஆதி.

அழுதாற் பெறலா மவன்கழ லென்றார்
அறிவாற் பவமே ழருவினை வென்றார். (உ0அ)

ஆதி.

திருவாய் மொழி திரு வாசகமே
பெருவாய்மையிதென்றார்தேசகமே. (உ0கூ)

சாப்பு.

குருகூர்ச் சடகோபன் கூறியதே
ஒருகூ றென் றன்புள் ளூறியதே. (உக0)

சாப்பு.

முகில்வண்ணன் சுடரென்று ராழ்வாரே
முதற்பாசுர மறிந்தார் வாழ்வாரே. (உகக)

ஆதி.

மூவரு மொன்றென்றார் நம்மாழ்வாரே
முதற்பாசுரந் தெரிந்தார் வாழ்வாரே. (உகஉ)

ஆதி.

முத்தொழி லொருவர்க்கென்று ராழ்வாரே
முறைபறிந்தோர் நற்கதி சூழ்வாரே. (உகங)

சாப்பு.

ஆதிபகவன் முதற்றேயென்ற வறிஞர்வாசகம்
சோதிசொருபன் பதத்தேநின்ற சுகுணதேசகம். (உகச)

ஆதி.

தெய்வமிகழேலென் று சொற்றவரோ
திரிபுர மெரிசெய்த நற்றவரே. (உகரு)

ரூபகம்.

சிவத்தைப்பேணிற் றவத்திற் கழகென்
றவத்தைத் தீர்வரே
பவத்தைப்போக்குந் தரத்தி லாக்கும்
பதத்திற் சேர்வரே. (உகசு)

ஆதி.

ஏவையு நீயென்றூர் பட்டினத்தாரே
ஈதறிந்தவர் தொண்டர்க் கினத்தாரே. (உகஎ)

சாப்பு.

சிறந்தநோன்பது கொன்று தின்னுமை யென்றூர்
செறிந்தவாணவமாயை யின்னுமை வென்றூர். (உகஅ)

ஆதி.

ஹரிஹர சமரச முறு பஜனம்
அறிவறி வறிபவர் பெறு வசனம். (உகக)

சாப்பு.

சமரச சன்மார்க்க சத்திய பஜனம்
சகத்தொடர்பிகந்துறை சற்சனர்வசனம். (உஉ0)

ஆதி.

ஒன்றாகக் காண்பதே பெறுங் காக்ஷி
அன்றாகக் காண்பதே வெறுஞ் சூக்ஷி. (உஉக)

ஆதி.

சங்கர நாராயணனை நாடுவோமே
நங்கள்குறைதீரவன்பாற்பாடுவோமே. (உஉஉ)

ஆதி.

சங்கர நாராயண சயம்பு சிவாவெனச்
சந்ததந்துதிப்பவர் தமைப்புகழ் வோமே
சங்கட முறுங்கலி தனிற்றவ மேதெனுஞ்
சஞ்சலக் கசடர்கள் தமையிகழ் வோமே. (உஉங)

சாப்பு.

தன்னை யறிவிக்குமவர் தாளிணை நினைப்போம்
பின்னை யறிவிக்குமவர் பேரதை மறப்போம். (உஉச)

சாப்பு.

தன்னையு மாதாரத் தலைவனையுங்காண்போம்
பின்னையும் பிறவாதபெருமையையும்பூண்போம். (உஉரு)

ஆதி.

மயர்வற வெவனல மதியருளினனே
மனநிலை யுறவவ னடிநினைமனனே. (உஉசா)

ஆதி.

அதிபதி யுயர்வற வமர்முழு பதமே
அயர்வறு மொருநிலை பெறநினை நிதமே. (உஉஎ)

ஆதி.

எவனுயர் வுடையவனனு தினமே
அவன்றுய ரறுசுடர் நினை மனமே. (உஉஅ)

ஆதி.

எவன்மதி யுயர்நல முழுவினனே
அவன்சுட ரடிதொழுதெழு மனனே. (உஉகூ)

ஆதி.

ஜீவகாருண்ய நூல் பாருங்கள்
பாவகாரியம்விடத் தேருங்கள். (உ௩0)

சாப்பு.

ஜெயதேவர் சரித்திரம் பாருங்கள்
தெய்வமொன்றேயெனத்தேருங்கள். (உ௩க)

சாப்பு.

வேத பாடிய மெல்லா மோருங்கள்
மெய்ம்மார்க்கமொன்றெனத்தேருங்கள். (உ௩உ)

ஆதி.

சன்மார்க்க சங்கமதிற் கூடுங்கள்
சங்கரநாராயணனைப் பாடுங்கள். (உநந)

ஆதி.

ஆண்டவ னொருவனென் றோடுங்கள்
அரிசிவ னவனெனப் பாடுங்கள். (உநச)

ஆதி.

சமரச பஜனையைச் செய்யுங்கள்
சன்மார்க்க நெறிதனி லுய்யுங்கள். (உநரு)

ஆதி.

நடுநிலை நின்றவர் பெருமொழியே
நவவெளிநடுவெனுமொருவழியே. (உநசா)

ஆதி.

வேத மியம்பும் பரிசிதுவே
நாதமும்விந்துந் தெரிவதுவே. (உநஎ)

ஆதி.

நம்பி யழிந்தவர் நாட்டினி வில்லை
நம்பாதவர் பெறு நலமொன்றுமில்லை. (உநஅ)

ஆதி.

போற்றிநின்முடி போற்றிநின்னடி
போற்றிநின்னடு போற்றியே
போற்றிநின்னிடம் போற்றிநின்வலம்
போற்றிநின்னலம் போற்றியே. (உநகூ)

ரூபகம்.

நாதபோத வேதனே ஞானமோன நீதனே
வாதநீடு பாதனே வாழ்கவாழ்க நாதனே. (உசO)

ஆளுடையபிள்ளையார்.

இராகம் - சங்கராபரணம் - தாளம் - ஆதி.

சத்திய ஞான சம்பந்தா
தண்டமிழ்முத் தறையின்பந்தா. (க)

ஆதி.

சண்பைப் பதிவளர் சம்பந்தா
சந்ததமுந் துதி யின்பந் தா. (உ)

சாப்பு.

திருஞான சம்பந்த தேவாதி தேவா
திகழ்பரம ஞானநிலை தெரிவிக்கவாவா. (௩)

சாப்பு.

சீகாழி சம்பந்த தேவாதி தேவா
சித்தமலை யாதவகை செய்விக்க வாவா. (௪)

சாப்பு.

சண்பைவளர் திருஞான சம்பந்த நாதா
சன்மார்க்கசங்கந் தழைக்கவருள் தாதா. (௫)

சாப்பு.

அடியேங்கள் பவப்பிணி யகற்றச் சீகாழியில்
அவதாரஞ் செய்த சற்குரு நாதா
ஆதர வுன்றிரு வடியன்றி யறிந்திலோம்
அற்புத மெய்ஞ்ஞான மருள் போதா. (௬)

சாப்பு.

திருஞான சம்பந்தர் தேவாரம்
திருஞான சபைவளர் தேவாரம். (௭)

சாப்பு.

ஆளுடைய பிள்ளையா ரரிய திருவடியே
அம்பலவ ரருளடையு மடியர்பெறுமுடியே. (அ)

சாப்பு.

திருஞான சம்பந்த தேவனையே
தெரிசிக்கத் தீர்ந்திடும் தீவினையே. (கூ)

சாப்பு.

மறைஞான சம்பந்த மகதேவன் பாதம்
மறவாதுபணிவோர்க்கு வருமேமெய்ப்போதம். (க0)

சாப்பு.

திருஞான சம்பந்த தேசிகன் பாதம்
சேவிக்குமவர் பெறுவர் தேவப்ரசாதம். (கக)

சாப்பு.

நலமருள் சம்பந்த நாதனையே
வலம்வருவார்க்கறும் வாதனையே. (கஉ)

சாப்பு.

சீகாழிப் பதிமேவுந் திருஞான சம்பந்த
தேசிகர் தேவாரந் தினந் துதிப்போம்
தேனூரும் பூங்கழல் சேவிக்கு மெய்யன்பர்
திருவடித் துகளை யெஞ்சிரம் பதிப்போம் (கங)

சாப்பு.

அற்புதத் திருஞான சம்பந்தரே நமக்
காரியராக வறிந்துகொண்டோம்
அருந்தமிழ் வேதப் பனுவலையே நிதம்
அன்புடனோத வானந்தங் கொண்டோம். (கச)

சாப்பு.

ஓதாதுணர்ந்தவர் ஞானசம்பந்தரென்
றுள்ளபடியே யுணரப்பெற்றோம்
ஓங்குஞ்சமரச சுத்தசன்மார்க்கருக்
குள்ளபணிசெய்ய வுள்ளமுற்றோம். (கரு)

சாப்பு.

திருஞான சம்பந்தர் திருநாமஞ் சொல்வோம்
உருநாமம் பலபேத முறுமாயை வெல்வோம். (சசூ)

சடகோபர்.

திரிபுடை.

சத்திய ஞான சடகோபா
தத்துவபத்திப் பிரதாபா. (க)

சாப்பு.

உயர்வறவென்றநம் மாழ்வாரே
உனைமறந் தவர்பவ மாழ்வாரே. (உ)

சாப்பு.

சத்தியச்சடகோபர் சொற்றமிழ் மறையே
முத்தியைப்பெறுவார்க்குநித்தியமுறையே. (ங)

சாப்பு.

சத்தியஞான சடகோபர் மொழியே
தத்துவஞான சமபோத வழியே. (ச)

ஆதி.

சடகோபர் பாசுரங் கற்றவரே
சடமாறுமாநலம்பெற்றவரே. (ரு)

சாப்பு.

சத்தியச் சடகோபர் சொற்றிடமே
பத்தர்கள் முத்தர்கள் பற்றிடமே. (சு)

சாப்பு.

குருகூர்ச் சடகோபர் கோலத்தைக் காண்பார்
வருகூற் றொழித்திடும் வல்லபம் பூண்பார். (எ).

சாப்பு.

சடகோபர் பதப்பணி வாய்ந்தவரோ
சமமாரும் பதச்சுகந் தோய்ந்தவரோ. (அ)

சாப்பு.

சத்திய சடகோபர் சந்நிதிசூழ்வார்
நித்தியபரலோக நின்மலவாழ்வார். (கூ)

திருவருட்பிரகாசவள்ளலார்.

இ - சங்கராபரணம் - தா - ஆதி.

தெருட்பதவாசா இருட்பவநாசா
அருட்பிரகாசா அருட்பிரகாசா. (க)

ஜம்பை.

திருவருட்பிரகாச வள்ளனீயே
குருவருட்பிரகாச வுள்ளமீயே. (உ)

ரூபகம்.

குருவாயுகந்தெனதொருமுடி குலவியமகதேவா
திருவாய்மலர்ந்தருளியபடி தெரிசனைதரவாவா. (ங)

ஜம்பை.

திருவருட்பிரகாசர் சேவடியைத்தொழுவார்
திரிபுணர்ச்சிவிடா வசேதனரைத் தழுவார். (ச)

ஜம்பை.

திருவருட்பிரகாசர் திவ்ய திருமுறையே
திருவருட்பெறவோதுந் தெய்வதிருமறையே. (ரு)

ரூபகம்.

திருவருட்பா முறையைத் தினமுந்துதிசெய்வார்
கருவிருட்பா டொழித்துக் கனவம்பலமுய்வார். (சு)

ரூபகம்.

ஹரிஹரபத நினையடியா ரடியார் தமதடியே
அநுதினநினைபவரடியா ரடியேமணிமுடியே. (க)

சாப்பு.

ஒருநிலை யருளுஞ் சீர் வாழியவே
பெருநெறியுலகெங்குஞ் சூழியவே. (உ)

ஆக நாமாவளி - சுகசு.

நேரிசைவெண்பா.

சற்சமய மாயோங்குஞ் சண்மதமு மப்பாலா
நற்சமர சாதீத நாயகமும் - பொற்சகத்தி
லின்னவகை யென்ற வெமதுகுரு ராமலிங்க
முன்னவன்றாள் வாழ்க முறை.

முற்றிற்று.

திருவருட்பிரகாசவள்ளலார்
திருவடிவாழ்க.

உ

குருவே துணை.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கபிள்ளையவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பாத் திருமுறைகளும், கத்தியரூபமான தோத்திரங்களும், நித்தியவிதிமுதலிய வுலகியலும், வள்ளலார் சரித்திரச்சுருக்கமும், கண்டார் வியந்து கைகுவித்து வணங்குங் காட்சியினை விளைவிக்கும் அப்பெருமான் திருவுருவப் படமும் அடங்கிய.

புத்தகம் 1-க்கு ரூபா. 3—8—0.

அம்மகான் திருவாய்மலர்ந்தருளிய ஜீவகாருண்ய வொழுக்கம், விக்ரகாராதனை, நித்தியவிதி முதலியவை யடங்கிய கத்தியரூபமான புத்தகம்.

காலிகோ கட்டடம் விலை அணா-

ஸ்டிப்கவர் அணா-

MBARANATHA MUDALIAR,
...HN 1934

சமரசசுத்தசன்மார்க்க...

☞ ச. மு... சாமிபிள்ளை,

...வெள்ளாற்பாக்கம்,

நெல்லிக்குப்பம்